தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

விலை 30 ரூபா • தீபம் 176 • 03.03.2019


**KK Restaurant**

Ac/ Non Ac Rooms

**Wedding Hall**

Western Model
Full Comfortable
•Wedding Ceremony
•Puberty Ceremony
•Birthday Party
•Any other party ceremony
Email: kumarakuru.lk@gmail.com
FB: KK Wedding Hall KK Rest

Kumarakuru Building
No: 09, A9 Road,
Anandapuram, Kilinochchi.



TP: 0776692184, 0776024416, 0772227025




## எங்களின் குரல் கேட்கிறதா...?



## மேலும் குண்டுகள் வீழும்



## பரந்த கூட்டணி இல்லையேல் தமிழர்க்கு எதுவும் இல்லை


**YARL AHI ICE CREAM**

**யாழ் அகி ஐஸ்கிறீம்**

திருமண நாள் மற்றும் பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய விழாக்களுக்கும்
வாகன வசதியுடன் வழங்கப்படும்.
மேலதிக விவரங்களை அறிந்திட www..yarlahi.com ஐ பார்வையிடவும்.





இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P: 021 791 7585 / 077 023 2328

தொகுப்பு : காவலூர் ஞானம்




# 100 மீ. ஓட்டக்காரர் 108 இல் மரணம்

105 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 100 மீற்றர் ஓட்டப் போட்டி நடத்துவது பற்றி கேள்விப்பட்டுள்ளீர்களா? ஜப்பான் இப்படியான போட்டிகளை நடத்தி, கொள்ளுத் தாத்தாக்களை உற்சாகப்படுத்தி வருகின்றது. சமீபத்தில் மியாஸக்கி என்ற ஓட்டக்காரர், தனது 108 ஆவது வயதில் மரணத்தை தழுவினார்.

இவர் 105 வயதுக்கு மேற்பட்ட ஓட்டப் போட்டிகளில் சாதனை படைத்தவர். 8 தடவை ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கங்கள் வென்ற உலகப் புகழ் ஓட்டக்காரர் போல்டின் பெயரை இணைத்து, "கோல்டின் போல்ட்" Golden Bolt என்று இவரை அழைத்தனர்.

1910இல் பிறந்தார் மியாஸக்கி. 2015 இல் தனது சொந்த நகரமான கியோட்டோவில் இடம்பெற்ற 105 வயதுக்கு மேற்பட்டவர்களின் 100 மீற்றர் ஓட்டத்தில் 42.22 விநாடிகளில் ஓடிமுடித்து உலக சாதனை படைத்திருந்தார். போல்ட் உட்பட முழு உலகையும் இந்தச் சாதனை கவரத் தவறவில்லை.

போல்ட் தனது ருவிட்டார் பக்கத்தில் பிரமிப்பை வெளிப்படுத்தி ஒரு பதிவும் இட்டிருந்தார். ஆனால், மியாஸக்கியோ அதிருப்தியோடுதான் இருந்திருக்கிறார். "நான் இதைவிட வேகமாக ஓடியிருக்கலாம். இப்படி மெதுவாக ஓடுகிறேன் என்று நினைத்து கண்ணீர் எனக்கு வந்தது. நான் "வயதாளியாகி" விட்ட உணர்வும் என்னுள் மேலிட்டது" என்று ஒரு பத்திரிகைப் பேட்டியில் கூறியிருந்தார்.



# மில்லியனர்

ஐரோப்பிய கால்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்கள் பொதுவாகவே கொழுத்த பணக்காரர்கள். காசைக் காசென்று பாராமல், திறமையான வீரர்களை பணத்தை எறிந்து அமுக்கி விடுவர்.

இங்கிலாந்தின் நட்சத்திர கால்பந்தாட்டக் கழகங்களில் ஒன்றான மன்செஸ்டர் யுனைட்டெட், ஜடொன் சஞ்சோ என்ற 19 வயது வீரருக்கு வலைவிரிக்க ஆரம்பித்துள்ளது. ஜேர்மனியின் பிரபல கழகமான டோர்ட்முன்டுக்காக விளையாடும் இந்த வீரரை வருகிற கோடையில், 100 மில்லியன் பவுண்ஸ் (சுமார் 2,376 கோடி இலங்கை ரூபா) என்ற இராட்சத தொகைக்கு வாங்கும் முனைப்பில் இருக்கின்றது.

"விங்கர்" ஸ்தானத்தில் விளையாடி வரும் இந்த இளம் வீரர், 2017 இல் "மன்செஸ்டர் சிற்றி" என்ற இன்னொரு ஆங்கிலேய கழகத்திலிருந்து விலகி. ஜேர்மன் கழகத்தில் இணைந்தார். இந்த நேரத்தில் "மன்செஸ்டர் யுனைட்டெட்" கழகம் தமக்கு இந்த இளம் வீரரைத் தரும்படி கேட்டிருந்தும், அதற்கு "மன்செஸ்டர் சிற்றி" கழக நிர்வாகம் சம்மதிக்கவில்லை.

தற்போது இடம்பெற்று வரும் சம்பியன் லீக் சுற்றுப் போட்டிக்கு இவர்கள் தகுதி காண் நிலைக்கு வராவிட்டால், இந்தக் கழகம் இத்தனை பெரிய தொகை கொடுத்து, இந்த இளம் வீரரை விலைக்கு வாங்குவது சந்தேகமே என்கிறார்கள் அவதானிகள்.

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். இந்த சஞ்சோ விற்கப்பட்டால், அத்தொகையின் 15 வீதத்தை டோர்ட்முன்ட் கழகம், "மன்செஸ்டர் சிற்றி"க்கு கொடுத்தாக வேண்டும் என்பது முன்பு எழுதப்பட்ட ஓர் ஒப்பந்தம்!

# அடித்துத் தொலைத்த 8 பந்துகள்



கிரிக்கெட்டில் அதிரடி ஆட்டத்திற்குப் பெயர் பெற்றவர், மேற்கிந்திய தீவுகளின் வீரர் கிறிஸ் கெய்ல். டெஸ்ட், ஒருநாள் போட்டி, ரி-20 போட்டி என எதுவானாலும், அவரது பாணியே தனி. தனக்கென தனி ரசிகர் பட்டாளத்தையே வைத்துள்ளார். மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபையுடனான கருத்து மோதல் காரணமாக, இவருக்கு அணியில் இடம் கிடைக்காமல் இருந்தது.

இந்நிலையில்தான், இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு இவர் அழைக்கப்பட்டார். இந்தப் போட்டியில், கிறிஸ் கெய்ல் 12 சிக்ஸர்களை விளாசினார். முதலில் நிதானமாக விளையாடிய கெய்ல், பின்பு விஸ்வரூபம் எடுத்தார். 120 மீற்றர் தூரத்திற்கு ஒரு பிரமாண்ட சிக்ஸரை விளாசி, ரசிகர்களுக்கு விருந்து படைந்தார்.

இதன்மூலம், 3 வடிவிலான கிரிக்கெட் போட்டிகளிலும் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர்களின் பட்டியலில், 488 சிக்ஸர்களுடன் கெய்ல் முதலிடத்தில் உள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் இவர் அடித்த 12 சிக்ஸர்களில், மைதானத்திற்கு வெளியே சென்ற 8 பந்துகளைக் காணவில்லை. இதேபோல, ஒரு நாள் கிரிக்கெட்டில் இதுவரை, 3 போட்டிகளில் 10-க்கும் மேற்பட்ட சிக்ஸர்களை விளாசியுள்ளார். 39 வயதிலும் அசத்தல் ஓயவில்லை.

# வாலாட்டினால் சிறைதான்

மல்யுத்த வீராங்கனைகள் றொண்டா றவுசியையும், "குவீன்" சார்லொட்டையும் மேடையிலேயே ஊன்றுகோல்களால் மோசமாகத் தாக்கிய லிஞ்ச் இந்த வாரப் பரபரப்பிற்குச் சொந்தக்காரராகி இருக்கிறார்.

இவருக்கு விதிக்கப்பட்ட 60 நாள் ஆட்டத் தடையை மீறி, இரு வீராங்கனைகளை தலை, உடம்பு என ஊன்றுகோலால் விளாசித் தீர்த்தபெக்கி லிஞ்சுக்கு துணிச்சல் அதிகம்தான்! ஆனால் கூடவே ஒரு அபாயமும் காத்திருக்கின்றது. இந்த "றெஸ்ஸிள் மேனியா 35 " நிகழ்வுக்கு முன்னர் றொண்டாவின் உடம்பிலோ அல்லது சார்லொட்டின் உடம்பிலோ மீண்டும் கைவைத்தால், லிஞ்ச் கைதாவார் என்பதுதான் அந்த அபாயம். அசட்டுத் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு மீண்டும் கோதாவில் குதிக்க மாட்டார் இந்த "ஆண்மகன்" லிஞ்ச் என்று நம்புவோமாக! என்னதான் மிருகத்தனமாக விளையாடினாலும், ஆயுதங்களால் தலையில் தாக்குபவருக்கு தடை பெரிதாக இருப்பது, இந்த மல்யுத்த அமைப்பின் ஒரு விதி என்பதையும் நாம் இங்கே நினைவில் கொள்ளவேண்டும். இது இப்படியிருக்க றொண்டாவை எதிர்த்த, "றூபி றயட்" கோஷ்டி அடுத்தடுத்த நாட்களில் மண் கௌவியிருக்கின்றது.

முதல் நாள் தனியனாக வந்த றூபியை தூசி தட்டுவது போல தட்டி வென்ற றொண்டா, இரண்டாவது தடவை மூவராக வந்தபோது ஆட்டம் கொஞ்ச நேரம் நீடித்தது. என்றாலும் முடிவில் "றூபி றயட்டின்" மூன்று அங்கத்தவர்களும் நன்றாக வாங்கிக் கட்டினர். ஷாஷாவும் பெய்லியும் புதிதாக அறிமுகமான இணைப்பாட்ட சம்பியன் பட்டியை தமதாக்கி இருக்கிறார்கள். இது எத்தனை வாரங்களுக்கு நிலைக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.





# எங்களின் குரல் கேட்கிறதா...?

— கானகன்

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மிகப்பெரும் மக்கள் போராட்டத்தைக் கடந்த திங்கட்கிழமை முன்னெடுத்தனர். கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இந்தப் போராட்டத்திற்கு வட மாகாணம் முழுவதும் திரண்டு ஏகோபித்த ஆதரவை வழங்கியிருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர் ஆரம்பித்த நாளில் நடத்தப்பட்ட இம்மாபெரும் போராட்டமும் - கடையடைப்பு போராட்டமும் இலங்கை அரசாங்கத்தின் மீதான தமிழர்களின் நம்பிக்கையீனத்தையும் - இலங்கை அரசாங்கத்துக்கு வலுவான அழுத்தத்தை சர்வதேசம் வழங்க வேண்டும் - முக்கியமாக இலங்கை அரசுக்கு மேலும் கால நீடிப்பை சர்வதேசம் வழங்கிவிடக்கூடாது என்பதையும் ஒருங்கே சொல்லியிருக்கிறது தமிழினம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சுமார் இரண்டு வருடங்களாக நடத்திய தொடர் போராட்டத்தை வலுப்படுத்துவதாக இந்தப் போராட்டம் அமைந்தது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தின் சிறப்பம்சம் அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், சிவில் சமூக அமைப்புக்கள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள், சங்கங்கள், சமாசங்கள், கல்வி அமைப்புகள் என அனைத்துத் தரப்பினரும் ஒரே அணியாகத் திரண்டமைதான்.

மக்கள் எழுச்சியாக நடந்த இந்தப் போராட்டம் இன்னொரு செய்தியை தமிழ்த் தலைமைகளுக்கு சொல்லியுள்ளது என்பதையும் நாம் மறுதலித்துவிட முடியாது. அது தமிழ்த் தலைமைகள் மீதான நம்பகத்தன்மையை கேள்விக்கு உட்படுத்துவதாக அமைந்து விடுகின்றது. பொதுவாக அரசியல் சார்ந்த போராட்டங்கள் இடம்பெறும்போது அரசியல்வாதிகள் முன்னிலையில் நின்று செயற்படுவது வழமை. ஆனால் இந்த மக்கள் போராட்டத்தில் அரசியல்வாதிகள் ஒரு பகுதியினராக கலந்து கொண்டனரே தவிர முன்னிலைவாதிகளாக இல்லை. பொதுவான கோரிக்கையை முன்வைத்து நடந்த இந்தப் போராட்டத்தில் அரசியல் தவிர்க்க முடியாதது என்பதாலேயே போராட்டக்காரர்களால் கலந்து கொண்ட அரசியல்வாதிகளும் அரவணைக்கப்பட்டனர்.

கிளிநொச்சி கந்தசாமி கோயிலில் முன்றலில் ஆரம்பமானது மக்கள் பேரணி. ஏ- 9 வீதி வழியாக நகர்ந்த பேரணியில் உறவுகளைத் தொலைத்த மக்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுதும், ஆவேசக் குரல் எழுப்பியும் உணர்வுகளை வெளிப்படுத்தினர். 'வேண்டாம் வேண்டாம் ஓ.எம்.பி. வேண்டாம்" என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோஷம் எழுப்பி, அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் மீதான தமது அவநம்பிக்கை உரத்து ஒலித்தனர்.

'வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்", 'வேண்டும் வேண்டும் எமது உறவுகள் வேண்டும்", 'எங்கே எங்கே எமது உறவுகள் எங்கே", 'ஐ.நா.வே, வழங்காதே வழங்காதே கால அவகாசம் வழங்காதே", 'அரசாங்கமே பொறுப்புக்கூறு, சர்வதேசமே பொறுப்புக்கூறு" என்பது போன்ற கோஷங்களும் ஆர்ப்பாட்டப் பேரணியில் எழுப்பப்பட்டன. 'போர்க் குற்றங்களை மறக்கமாட்டோம், மன்னிக்கவும் மாட்டோம்" என கிளிநொச்சி வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த 'மறப்போம்... மன்னிப்போம்..." கோரிக்கையையும் நிராகரித்துக் குரல் எழுப்பினர் உறவுகள்.

இவ்வாறு, 8 கிலோ மீற்றர் தூரம் சென்று ஐ.நா.வின் யுனிசெவ் அலுவலக அதிகாரிகளிடம் மகஜரைக் கையளித்தனர். 'ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட இரண்டு முக்கிய தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்கிய இலங்கை அரசாங்கம் கால நீடிப்பைப் பெற்று பாதிக்கப்பட்ட மக்களை மட்டுமல்லாமல், ஐ.நா.வையும் சர்வதேசத்தையும் ஏமாற்றி வருகின்றது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி தாமதிக்கப்படுவதன் ஊடாக நீதி மறுக்கப்படுகின்றது.

எனவே இம்முறையும் கால அரசுக்கு கால அவகாசம் வழங்காமல், இலங்கை விவகாரத்தை ஐ.நா. பொதுச்சபைக்குக் கையளிக்க வேண்டும். போர்க்குற்றச் செயல்கள் தொடர்பாக சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். அத்துடன் போர்க்குற்றங்கள் தொடர்பாக விசேட சர்வதேச தீர்ப்பாயம் நியமிக்கப்பட்டு நீதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த தாய்மாரின் சார்பில் கையளிக்கப்பட்ட மகஜரில் கோரப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு

தமிழின் முதன்மை வார இதழ்
தீபம்

• சந்தைப்படுத்தல் அலுவலர்கள்
• விளம்பர சேகரிப்பாளர்கள்

அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்

தொடர்புகளுக்கு :

தீபம் வார இதழ்
இல.10, வில்வம் தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

T.P : 077 198 9445 Email: advertdeepam@gmail.com

# போருக்கு அறைகூவும் இந்தியா!

## இராணுவ பலம் என்ன?

ஓர் அலசல்

2016 செப்ரெம்பர் 29 ஆம் நாள், அதி காலை 12:30 மணி.

பாகிஸ்தான் ஆக்கிரமித்து நிற்கும் காஷ்மீர் பகுதியில் சுமார் 2 கி.மீ. தூரம் ஊடுருவுகிறது இந்திய இராணுவம். 'சர்ஜிக்கல் ஸ்ட்ரைக்' எனப் பெயர் சூட்டப்பட்ட நடவடிக்கை ஒன்றைச் செய்கிறது. 'இந்த நடவடிக்கையில் 38 பாகிஸ்தான் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்" என அறிவிக்கிறது இந்திய இராணுவம்.

முன்னதாக செப்ரெம்பர் 18 ஆம் நாள் இந்தியாவுக்குள் ஊடுருவிய பாகிஸ்தான் போராளிகள் காஷ்மீரின் ஊரி இராணுவ முகாமுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில் 19 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாகவே சர்ஜிக்கல் ஸ்ட்ரைக் நடவடிக்கையை இந்திய இராணுவம் முன்னெடுத்தது.

இதே போன்றதொரு தாக்குதலை இப்போது இந்தியா செய்துள்ளது. புல்வாமா இராணுவ முகாமுக்குள் புகுந்த தற்கொலைதாரி நடத்திய தாக்குதலில் 40 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக பாகிஸ்தான் எல்லைக்குள் விமானங்களை அனுப்பி குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளது இந்தியா. 'இந்தத் தாக்குதலில் 350 இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்" என அறிவித்தது இந்தியா. இந்தச் செய்தியை '40 இற்கு 400" எனத் தலைப்பிட்டுக் கொண்டாடின இந்திய பத்திரிகைகள்.

இரு நாடுகளுக்கும் இடையே மூண்டுள்ள இந்தப் போர் மேலும் தொடருமா...? என்று சர்வதேசம் அச்சத்துடன் பார்க்கிறது. ஏனெனில் இரு நாடுகளுமே இராணுவச் சமநிலையில் வலிமையுடன் இருப்பவை மட்டுமல்ல அணு குண்டுகளையும் அவற்றை ஏவும் வல்லமையும் பெற்றுள்ளன. எங்கே இவற்றின் போர் அணு ஆயுதப் பாவனை வரை சென்றுவிடுமோ என்ற அச்சம் சர்வதேசத்திடம் உண்டு.

புல்வாமா தாக்குதலை தமக்கு ஏற்பட்ட அவமானமாக இந்தியா கருதுகிறது. இப்போது தேர்தல் காலம் வேறு என்பதால் உடனடியாகவே பதிலடி நடவடிக்கையில் மோடி அரசு இறங்கியுள்ளது. இதனால் மூண்டுள்ள போர் மேலும் அதிகரிக்கலாம் என்பதுடன் பாகிஸ்தான் எல்லைக்கு அண்மையாக இருக்கும் இந்திய மக்கள் இடம்பெயர ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறான நிலையிலேயே புல்வாமா தாக்குதலுக்கு 12 நாட்கள் கடந்து சர்ஜிக்கல் ஸ்ட்ரைக் நடவடிக்கை போன்று மற்றுமொரு அதிரடித் தாக்குதலை கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை நடத்தியது இந்திய விமானப்படை. இந்தப் பதிலடித் தாக்குதலுக்கு இந்திய விமானப்படை வெறும் 21 நிமிடங்களையே எடுத்துக் கொண்டதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

12 மிரஜ் ரக போர் விமானங்களில் சுமார் 1,000 கிலோ குண்டுகள் கொண்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என ஏ.என்.ஐ செய்தி தெரிவித்துள்ளது. மேலும் மூன்று இடங்களில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

பாகிஸ்தானின் பாலகோட் (மடயமழவ) பகுதியில் அதிகாலை 3:45 மணியிலிருந்து 3:53 மணி வரை நடத்தப்பட்ட பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் தலைநகரான முசாஃபராபாத்தில் (Muzaffarabad) அதிகாலை 3:48 மணியிலிருந்து 3:55 மணிக்குள்ளாகவும், சக்கோட்டி (Chakothi) பகுதியில் 3:58 மணி முதல் 4:04 மணிவரையிலும் இந்திய விமானப்படையின் தாக்குதல்கள் அரங்கேறின.

இந்தத் தாக்குதலின் போது இந்திய விமானப்படைக்குச் சொந்தமான மிக் 21 விமானம் ஒன்றை பாகிஸ்தான் இராணுவம் சுட்டு வீழ்த்தியதுடன் அபினந்தன் வர்த்தமன் என்ற விமானப் படையை சேர்ந்த ஒருவரையும் பிடித்துள்ளோம் எனப் பாகிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது. அது தொடர்பான ஆதார வீடியோவையும் பாகிஸ்தான் வெளியிட்டுள்ளது. இப்போது அந்த வீரரை விடுவிக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளிடையே போர் மூண்டால் அது மிகப் பெரும் அழிவுகளை ஏற்படுத்த வல்லது. இராணுவ வலுச் சமநிலையில்

அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய மூன்று நாடுகளுக்குப் பிறகு அதிகளவு படை பலம், ஆயுத பலம் கொண்ட உலகின் நான்காவது வலிமையான இராணுவத்தை இந்தியா கொண்டுள்ளது.



## ஜெனிவாவுக்கு தமிழர்கள் விடுத்துள்ள செய்தி என்ன?

தீபம்

ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடர் ஆரம்பித்த நாளில் - வடக்குத் தமிழர்கள் ஒருங்கிணைந்து சர்வதேசத்துக்கு ஒரு வலுவான செய்தியை சொல்லியுள்ளார்கள். இலங்கை அரசாங்கத்தின் மீதும் அதன் நீதி விசாரணைகளிலும் எமக்கு நம்பிக்கை இல்லை, இலங்கைக்கு மீண்டும் ஒரு கால நீடிப்பை சர்வதேசம் வழங்கக்கூடாது என்பதை ஏகோபித்த தமிழர்களின் கோரிக்கையாக முன்வைத்துள்ளனர்.

தமது உறவுகளுக்காக வடக்கு மாவட்டமே ஒன்றாக முடங்கிய நிலையில் கிளிநொச்சியில் மாபெரும் பேரணிப் போராட்டம் ஒன்றையும் நடத்தி இலங்கை அரசாங்கத்துக்கு தங்களின் எதிர்ப்பையும் சர்வதேச சமூகத்திடம் தங்கள் எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்தியுள்ளார்கள் தமிழ் மக்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் இணை அனுசரணையாளராக இலங்கை சில வாக்குறுதிகளை 2015 இல் அளித்தபோதும் அவை எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறான நிலையில் 2017 இல் மேலும் கால அவகாசம் ஒன்றை இலங்கை கோரியிருந்தது. அதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டபோதும் எதுவும் நடக்கவில்லை. பெயருக்காக காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகத்தை அமைத்தார்கள். போர்க் குற்றவாளிகள் விசாரணைக்குக் கூட அழைக்கப்படவில்லை. மாறாக அவர்களுக்க பதவி உயர்வுகளையும், வேறு பதவிகளையும் வழங்கி இலங்கை அரசாங்கம் அழகு பார்த்தது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த அலட்சியப் போக்குக் குறித்து ஆட்சிக்கு துணை நிற்கும் தமிழ் அரசியல்வாதிகள்கூட தட்டிக் கேட்கும் மனநிலையற்றவர்களாகவே இதுவரை செயற்பட்டனர். இப்போது இலங்கை கோரவுள்ள கால நீடிப்புத் தந்திரத்துக்கு இவர்களும் துணைபோகிறார்கள் என்ற சந்தேகம் மக்களிடையே எழுந்தது. இந்நிலையிலேயே மக்கள் தமது சக்தியை நிரூபிக்கும் விதத்தில் வடக்கு தழுவிய முழு அடைப்பு - மாபெரும் பேரணிப் போராட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர்.

மக்கள் இலங்கை அரசுக்கும் - சர்வதேச சமூகத்துக்கும் மட்டுமல்ல தமிழ்த் தலைமைகளுக்கும் வலுவான செய்தியை இந்தப் போராட்டம் மூலம் சொல்லியிருக்கிறார்கள். இலங்கை அரசின் தந்திர கால நீடிப்புக் இடம் வழங்கக்கூடாது, சர்வதேச விசாரணைப் பொறிமுறையே எமக்கு வேண்டும் என்பதை வலுவாக சொல்லியிருக்கிறார்கள். அதற்காக மக்கள் தொடர்ந்து போராடத் தயார் என்பதே.

### பரந்த கூட்டணி...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்களை மூழ்கடிப்பது கடலின் இயல்பு. கடலில் கப்பலை மூழ்கிவிடாமல் செலுத்த வேண்டியது மாலுமியின் பொறுப்பு அப்படியென்றால் தடம்புரண்ட தலைமைக்குப் பதிலாக மாற்றுத் தலைமையை உருவாக்குவது பற்றிய விடயத்தை பின்வருமாறு பார்க்கலாம்.

"Creative Destruction", "Constructive Destruction" என்று இரண்டு கோட்பாட்டுப் பதங்கள் உண்டு. இதில் முதலாவது பதம் இடதுசாரிகளால் முன்வைக்கப்பட்டது. இரண்டாவது பதம் வலதுசாரிகளால் முன்வைக்கப்பட்டது. அடிப்படையில் இரண்டும் ஒருகுடும்பப் பதங்களானாலும் இரண்டிற்கும் இடையே விசித்திரமான வேறுபாடுண்டு.

முதலாவது பதத்தில் இருக்கின்ற பழையதை இடைவிடாது உடைத்து இன்னொரு புதியதை இடைவிடாது ஆக்கிக்கொள் என்பதாகும். உதாரணமாக பாழடைந்த கட்டடத்தை அழித்து புதிய அழகிய கட்டடத்தை உருவாக்கு என்பது. இங்கு பழய பொருள் முற்றிலும் அழித்துக் கைவிடப்படுகிறது. இரண்டாவது பதத்தின் பொருள் பயனற்றுப் போன பழையதில் இருந்து புதியதை ஆக்குவதாகும். உதாரணமாக உடைந்து போன கண்ணாடிப் பொருளை உருக்கி புதிய அழகிய கண்ணாடிப் பொம்மையை உருவாக்கு என்பது. இங்கு உடைந்து போன பழய கண்ணாடி கைவிடப்படாமல் அதிலிருந்து புது வடிவம் உருவாகிறது.

மேற்படி இரு கோட்பாடுகளையும் கருத்தில் எடுத்து ஒரு மாற்றுத் தலைமையை உருவாக்க வேண்டும். அது போர்க்குற்ற விசாரணை என்ற ஒரு திட்டவட்டமான புள்ளியில் ஆரம்பித்து அறிஞர்கள், கலைஞர்கள், பண்பாட்டு செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என்போரை அரவணைத்து ஒரு தமிழ்த் தேசிய பேரியக்கத்திற்கு வழி ஏற்படுத்த வேண்டும். இந்த பெரும் பணியை செய்யவல்லத் தலைவர்களை வரலாற்று அன்னை தலைதடவத் தவறமாட்டாள்.

## சொத்து விவரங்களை வெளியிடத் தயாராகும் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள்

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விவரங்களை பொது வெளியில் வெளிப்படுத்துவதற்கு தன்னிச்சையாக முன்வந்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ. சுமந்திரன், தாரக பாலசூரிய, வாசுதேவ நாணயக்கார, விதுர விக்கிரமநாயக்க மற்றும் அமைச்சர் எரான் விக்கிரமரத்ன ஆகியவர்களே இவ்வாறு நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காக முன்வந்துள்ளனர்.

ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நெஷனல் கடந்த பல ஆண்டுகளாக சொத்துக்கள் பற்றிய விபரங்களை பொது வெளியில் கொண்டுவருவதற்கான பிரசாரங்களை மேற்கொண்டது. பிரதிநிதிகளின் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் திடமாக நிச்சயப்படுத்துவதற்கு ஏதுவாக அமையும். வெளிப்படுத்தப்பட்ட சொத்து விவரங்களை www. tisrilanka.org/MPassets இல் பார்வையிடலாம்.

இவ்வரலாற்று நிகழ்வில் உரையாற்றி ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நெஷனல் நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக்க ஒபேசேகர தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை பொதுமக்களுக்கு வெளிப்படுத்துவதற்காக முன்வந்த 5 பாராளுமன்ற உறுப்பினர்களையும் வரவேற்பதுடன் அரசியல்வாதிகளின் சொத்துவிவரங்களை பொதுத்தளத்தில் வெளியிடுமாறு கோரி மேற்கொண்ட பிரச்சாரத்தின் மைல்கல்லாக கருதுகின்றோம்.

இந்த செயற்பாடானது ஏனைய மக்கள் பிரதிநிதிகளையும் தமது சொத்து விவரங்களை வெளிப்படுத்துவதற்கு ஊக்குவிப்பதுடன் கேள்விகள் இன்றி பொதுநலன் என்ற அடிப்படையில் தகவல்களை வழங்குவது அவசியம் என குறிப்பிட்டார்.

ஒபேசேகர இது தொடர்பாக மேலும் கூறுகையில், இது வெளிப்படையான பாராளுமன்றத்தை காட்டுவதுடன் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதாகவும் அமைவதுடன் மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும். தகவல்கள் பொதுமக்களின் கரங்களில் சென்றால் நல்லாட்சியின் திறவுகோலாகும் என்பதுடன் ட்ரான்ஸ்பரன்சி இன்டெர்னஷனலின் நீண்டகால நிலைப்பாடும் இதுவேயாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### உலகின்....

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யசோதை அவுஸ்ரேலியாவின் மேற்கு சிட்னியில் உள்ள ரூட்டி ஹில் உயர்நிலைக் கல்லூரி யில் (Rooty Hill High School) வரலாறு, சமூகமும் கலாசாரமும், புவியியல் பாடங்களை கற்பிக்கும் ஓர் ஆசிரியர். இக் கல்லூரியில் கல்விகற்கும் 80 வீதமான மாணவர்கள் அகதிகளாகவும், புலம்பெயர்வாளர்களாகவுமே உள்ளனர்.

அகதிகள், புலம்பெயர்வாளர்கள் மற்றும் அவுஸ்ரேலிய பழங்குடியினரின் சமத்துவமான கல்விக்காக அவர் தினமும் அங்கு போராடுவதுடன் கல்வி தொடர்பாக தனது தனிப்பட்ட செயற்றிட்டங்களை போதிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அவுஸ்ரேலிய பழங்குடியினர் கல்வியின் மீது மிகவும் நாட்டம் குறைந்தவர்கள், மிகவும் பின்னிலையில் உள்ள ஓர் சமூகம்.

ரூட்டி ஹில் கல்லூரியில் 65 பழங்குடி மாணவர்கள் கல்வியை விரும்பிக் கற்பதற்கு யசோதை காரணமாக இருந்ததுடன் அங்குள்ள பழங்குடி இன மக்களிடையே கல்வி குறித்த தேவையினை உணரவைத்து பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற ஆசையை ஊட்டியதாக அவர் மீது அவுஸ்ரேலிய ஊடகங்கள் புகழ்மாலை சூட்டியுள்ளன.

179 நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற பத்தாயிரத்துக்கும் அதிகமான பரிந்துரைகலிலிருந்தே இந்த பத்துப் பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 2010 இல் உருவாக்கப்பட்ட லண்டனை தலைமையக்கமாகக் கொண்ட " The Varkey Foundation " எனும் அமைப்பே இந்த நிகழ்வை வருடா வருடம் நடத்தி வருகின்றது.

எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதி அறிவிக்கப்படும் முதல் பரிசினையும் இவரே பெற்று தன் குடும்பத்திற்கும், தமிழ் சமூகத்திற்கும், அவுஸ்ரேலிய நாட்டிற்கும் மேலும் பெருமை சேர்க்க வேண்டுமென நாமும் வாழ்த்துவோம்.

மு.திருநாவுக்கரசு

# பரந்த கூட்டணி இல்லையேல் தமிழர்க்கு எதுவும் இல்லை

தமிழ் மக்களின் அரசியற் தலைவிதியை நிர்ணயிப்பதற்கான பணியை தமிழ்த் தலைமையைச் சீர் செய்வதிலிருந்து தொடங்க வேண்டும். தமிழீழக் கோரிக்கை ஜனநாயக ரீதியில் தந்தை செல்வா, தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம், தளபதி அமிர்தலிங்கம், சிம்மக்குரல் மு.சிவசிதம்பரம் போன்ற மூத்த தலைவர்களால் முன்வைக்கப்பட்டது. தமிழீழக் கோரிக்கை ஆரம்பிக்கப்பட்ட காலத்தைவிடவும், அதற்கான தேவையும், பரப்பும், நியாயமும் மிகப்பெரிதாய் வளர்ந்திருக்கும் காலம் இது. மேற்படி மூத்த தலைவர்களினால் உருவாக்கப்பட்ட இக்கோரிக்கையும், போராட்டமும் பின்பு அவர்களால் முன்னெடுக்கப்படாத நிலையில் இளைஞர்கள் முன்னெடுத்துப் போராடும் நிலை உருவானது.


இளைமைத் துடிப்பும், இலட்சிய வேட்கையும், தூய சிந்தனையும், அர்ப்பணிப்பு உணர்வும் கொண்ட இளைஞர்கள் சட்டத்தாலான அரச ஒடுக்குமுறைகளையும், இராணுவ-பொலிஸ் அட்டூழியங்களையும் எதிர்த்து தியாக உணர்வுடன் போராடத் தொடங்கினர்.

ஒடுக்குமுறையின் பொருட்டு யுத்தத்தை அரசு திணித்தது. தமிழ் மக்கள் யுத்தத்தை எதிர்கொண்டனர். தமிழீழப் போராட்டத்தை முன்வைத்த தந்தை செல்வாவாலோ அல்லது மூத்த தலைவர்களாலோ அதற்கான வழிமுறைகளை முன்னிறுத்தத் தவறினர். இங்கு விசுவாசப் பிரமாணங்களைக் கடந்து ஒரு சரியான மதிப்பீட்டை மேற்கொள்ளும் அரசியல் பண்பாட்டிற்கு தமிழ் மக்கள் தம்மை ஆளாக்கிக் கொள்ள வேண்டும். எப்படியோ ஒரு நூற்றாண்டு காலத் தோல்விகளின் வரலாறு தொடர்கதையானது.

இறுதி அர்த்தத்தில் தமிழ் மக்கள் எதிரியின் காலடியில் சிக்குண்டு கிடக்கின்றனர். தமிழ் மண் சிதைவுற்றுள்ளது.தமிழரின் குடித்தொகை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது. வடக்கில் இருந்து கிழக்கு பிரித்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. தோற்கடிக்கப்பட்ட மக்கள் என்ற மனநிலையுடனும், வெற்றி கொண்ட இராணுவம் என்ற மமதையுடனும் தமிழ் மண் அரசியற் சகதிக்குள் மூழ்கியுள்ளது.

மேய்ப்பர் அற்ற மந்தைகளாய், நம்பிக்கையற்ற நடைபிணங்களாய் ஈழத் தமிழ் மக்கள் அரசியற் பாலைவனத்தில் தள்ளப்பட்டுள்ளனர். 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் 1914ஆம் ஆண்டு 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆர்மீனியர்களை துருக்கியப் பேரரசு கொன்று குவித்தது. 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் 60 இலட்சம் யூதர்களை ஹிட்லரின் நாஸிச ஜேர்மனி கொன்று குவித்தது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் 1968ஆம் ஆண்டு 11 இலட்சம் மக்களை பியஃப்ராவில் நைஜீரிய



இராணுவம் கொன்று குவித்ததுடன் மேலும் 20 இலட்சம் மக்களைப் பட்டினிச் சாவிற்கு உள்ளாக்கியது. அரச இயந்திரம் ஆடை அணிவதில்லை. எனவே அதற்கு வெட்கமும் இல்லை, துக்கமும் இல்லை. கூடவே அதற்கு இதயமும் இல்லாததால் அதனிடம் இரக்கமும் இல்லை என்ற உண்மைதான் இந்த வரலாற்றைப் படிக்கும் போது ஏற்படுகிறது.

21ஆம் நூற்றாண்டில் ஒன்றரை இலட்சம் அப்பாவித் தமிழ் மக்கள் கேட்பாரின்றி, பார்ப்பாரின்றி, நியாயம் கேட்பாரின்றி முள்ளிவாய்க்காலில் 2009ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டனர். இதன் மூலம் ஒரு நூற்றாண்டுகால உலகளாவிய இனப்படுகொலை வரலாற்றில் ஈழத் தமிழரின் வரலாறும் ஓர் அத்தியாயமாய் பதிந்துள்ளது.

ஜப்பானில் அணுகுண்டு வீச்சுக்களால் கொல்லப்பட்ட மக்களின் தொகை 1,40,000. ஆனால் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை அதையும் விஞ்சியுள்ளது. உதைத்து வீழ்த்தியவனின் கால்களைத் தழுவுமாறு உதைக்கப்பட்டு வீழ்ந்து கிடப்பவனை கோருவதற்குப் பெயர்தான் 'நல்லிணக்கம்". அவ்வாறு கோருபவர்களுக்குப் பெயர்தான் 'நல்லாட்சி". இவர்களுக்குத் துணைபோவதற்குப் பெயர்தான் தற்போதைய தமிழ்த் தலைமை.

படுகொலைக்கு உள்ளான, அநீதி இழைக்கப்படும் அனாதரவான அப்பாவித் தமிழ் மக்களை பாதுகாக்கவல்ல தலைவர்கள் யார்? தமிழ் மக்களுக்கான நீதிக்கும், விடிவிற்கும், வாழ்விற்கும் வழிகாட்டவல்ல திறமையை, ஆற்றலை, வல்லமையை, ஆளுமையைக் கொண்ட தலைவர்கள் யார்? வெற்றிக்கு வழிகாட்டவல்ல சீரிய பண்புகொண்ட தலைவர்கள் யார்? இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய பாதையில் கடந்த பத்தாண்டுகளாய் தோல்வியடைந்தவர்கள் தோல்விக்குப் பொறுப்பேற்பதும், அவர்களைத் தாண்டி மாற்றுத் தலைவர்கள் உருவாக வேண்டியதும் வரலாற்றின் கட்டளையாக உள்ளது. மாற்றுத் தலைமைப் பற்றி முதல் முறையாக அரசியல் ரீதியில் குரலெழுப்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி அதற்கான முதலடியை எடுத்து வைத்தவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலமாவார்.

அதைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து திரு.சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப்-ம் வெளியேறியது. இவர்கள் இணைந்து மாற்றுத் தலைமைக்கான ஓர் அமைப்பை தமிழ் மக்கள் பேரவை என்ற பெயரில் ஆரம்பித்தனர். அதற்கு வடமாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஷ்வரனைத் தலைவராகவும், மருத்துவர் லஷ்மனை இணைத் தலைவராகவும் ஆக்கினர். மாற்றுத் தலைமைக்கான புதுவரவை மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கும் நிலை உருவானது.

தாம் அனைவரும் பலம்பொருந்திய மாற்றுத் தலைமையை உருவாக்க வல்லவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு இவர்கள் அனைவருக்கும் உண்டு. தூக்கிய காவடியை ஆடியாக வேண்டும். துயரப்படும் தமிழ் மக்களுக்கு விடிவைக் காட்ட வேண்டும்.

அதற்கான ஆளுமையை, ஆற்றலை வெளிப்படுத்த முடியாதுவிட்டால் வரலாறு நிச்சயம் அனைவரையும் பழிகூறும். உடைந்து போவதற்குக் காரணங்களைத் தேடாமல் இணைந்து பலமான மாற்றுத் தலைமையை உருவாக்குவதற்கு காரணங்கள் தேடவேண்டும். 1984ஆம் ஆண்டு யாழ் கைலாசபதி கலையரங்கில் நிகழ்ந்த ஒரு கருத்தரங்கில் பின்வருமாறு நான் கூறிய கருத்தை இங்கு நினைவுபடுத்துவது நல்லது.

எங்களுக்குள் நாங்கள் விட்டுக்கொடுத்து ஐக்கியப்படத் தவறினால் எதிரிகளிடம் அனைவரும் சரணடையவேண்டி நேரும். நாம் அனைவரும் தற்போது எதிரிகளின் காலடியில் .வீழ்ந்துகிடக்கிறோம் என்பதை கணக்கில் எடுக்கத் தவறக்கூடாது. வரலாற்றில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளத் தவறக்கூடாது.

இப்போது மாற்றுத் தலைமைக்கான ஒரு குறியீடாய் முன்னாள் வடமாகாண முதலமைச்சர் விக்னேஷ்வரன் காணப்படுகிறார். அவரது கடந்த ஐந்தாண்டுகால அரசியல் நடைமுறைகள் அவரை நம்புமாறு ஆணையிடுகின்றன. அன்றைய ஜனாதிபதி ராஜபக்ஷ வின் முன்னிலையில் திரு. விக்னேஷ்வரன் வடமாகாண முதலமைச்சராய் பதவிப்பிரமாணம் செய்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு.ஆர். சம்பந்தனுக்கு விசுவாசமாய் தன் அரசியலை ஆரம்பித்தார்.

இலங்கையில் தலைசிறந்த நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய சேர். பொன். அருணாசலம் ஓய்வு பெற்றபின் அரசியலில் ஈடுபட்டார். சிங்களத் தலைவர்களுடன் இணைந்து ஒரு புதிய நவீன இலங்கையை உருவாக்க



முற்பட்டார். அதற்காகத் தானே முன்னின்று தலைமைப் பதவியைப் பொறுப்பேற்று இலங்கைத் தேசியக் காங்கிரஸ் என்னும் அமைப்பை 1919ஆம் ஆண்டு உருவாக்கி சிங்களத் தலைவர்களுடன் இணைந்து சுதந்திரப் போராட்டத்தில் அடியெடுத்து வைத்தார். ஆனால் சிங்களத் தலைவர்களுடனான அனுபவம் கசப்பான இனவாதத்தை வெளிப்படுத்தியதால் அதிலிருந்து விலகி 1921ஆம் ஆண்டு தமிழர் மகாசபை என்னும் ஓர் அமைப்பை உருவாக்கினார்.

இது முற்றிலும் விக்னேஷ்வரனுக்கும் பொருந்தும் அவர் சிங்களத் தலைவர்களுடன் இணைந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடன் இணைந்து நீதியான வரலாற்றை முன்னெடுக்கலாம் என நம்பியிருக்க வேண்டும். ஆனால் அனுபவம் எதிர்பக்கமாக அமைந்த நிலையில் அவர் தமிழ் மக்களின் நீதிக்கான குரலாய் தன்னை நிலைநிறுத்தினார்.

(07 ஆம் பக்கம் பார்க்க..)

# பரந்த கூட்டணி இல்லையேல்...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் வசதிகருதி அரசாங்கத்தின் பக்கமோ, ஆர்.சம்பந்தன் தலைமையிலானோர் பக்கமோ செல்லவில்லை. மலையில் இருந்து தரைக்குப் பாயும் நதி மீண்டும் மலையேறாது என்பது போல அவர் தான் தொடங்கிய இடத்தில் இருந்து நீதியையும், தமிழ் மக்களின் உரிமையையும் நோக்கிய பாதையில் திடமாகப் பயணிக்கலானார். சேர். பொன். அருணாசலம் ஆத்மீக நாட்டங்கொண்டு பின்னர் அரசியலைக் கைவிட்டது போல, தன்னை நம்பிய மக்களை விக்னேஷ்வரன் கைவிட்டுவிடக்கூடாது என்பதை அருணாசலத்திடமிருந்து கற்கத் தவறியிருக்க மாட்டார்.

ஓடும் நதி சுத்தமாகிவிடும். பாயும் நீர் புனிதப்பட்டுவிடும். ஆதலால் அனைவரும் கூட்டுச் சேர்ந்து இலக்கை நோக்கி ஓடும் போது பாதையில் இருக்கக்கூடிய அழுக்குகளையும் கடந்து அது சுத்தமாகிவிடும். குப்பைகள் குறுக்கே கிடந்தாலும் ஆறுகள் ஓடும்போது குப்பைகள் ஒதுங்கும் அல்லது அந்த குப்பைகள் ஆற்றோடு கரைந்து வண்டல் மணலாக மாறும். இது நடைமுறை சார்ந்த இயல்பு. மக்களுக்குப் பொறுப்பாக இருப்பதன் மூலம் மக்களுக்கான விடுதலையை முன்னெடுக்க முடியும்.

இப்போது வெளிப்படையாகத் தெரியும் நடைமுறைக்குப் பொருத்தமான விடயம் என்னவெனில் தன் ஐந்து வருட அரசியல் நடைமுறையால் தன்னை நிரூபித்திருக்கும் விக்னேஷ்வரனை முன்னிறுத்தி ஏனைய தலைவர்கள் கூட்டிணைந்து ஒரு பொறுப்பான கூட்டுத் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். விக்னேஷ்வரன் தமிழ் மக்களின் உரிமைக்கான குறியீடாக உள்ளார். மக்கள் மத்தியில் அவருக்கு அங்கீகாரமும், மதிப்பும் உண்டு.

அவர் ஒரு முதிய தலைவர் என்ற வகையில் அவருக்கான சமூக அங்கீகாரம் உண்டு. அவர் தமிழ்த் தேசியத்திற்கான கௌரவத்தை நிச்சயம் பிரதிபலிப்பார் எனத் தெரிகிறது. அவரது குரல் சர்வதேச அரங்கில் மதிப்பார்ந்த வகையில் எடுபடக்கூடியது.

இது தமிழ் மக்கள் முன் தற்போது காணப்படும் ஒரு முக்கிய வளம். அவரைப் பலப்படுத்தி தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியது ஏனைய அனைத்துத் தலைவர்களினதும் பொறுப்பு.

தமிழ் மக்களின் உரிமையின் பொருட்டு இரத்தத் தியாகம் செய்த குமார் பொன்னம்பலத்தின் பெயரால் அவரது மகனான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு இதயசுத்தியுடன் செயற்படுவதற்கான பின்புலம் உண்டு. அவர் விலைபோக மாட்டார் என்பதற்கு அவரது வரலாறும் சாட்சியாக உள்ளது.

இப்போது வேறுபாடுகளைக் கடந்து பலதரப்பினரையும் அரவணைத்து விக்னேஷ்வரனோடு கைகோர்த்து செயற்பட வேண்டிய வரலாற்றுக் கட்டாயம் இளந்தலைவரான அவருக்கு உண்டு. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும், ஈ.பி.ஆர். எல். எப். அமைப்பிற்கும் இடையே கசப்பான வகையில் முரண்பாடுகள் முற்றியுள்ளன. விடுதலைப் புலிகளும், ஈபிஆர்எல்எப் அமைப்பினரும் பரஸ்பரம் துப்பாக்கிகளால் பேசிய கடந்தகாலம் உண்டு. அதனைக் கடந்து ஈபிஆர்எல்எப் தலைவரும், விடுதலைப் புலிகள் தலைவரும் வன்னியில் கைகோர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒன்று கலந்தார்கள்.

அப்போது அவர்களது துப்பாக்கியால் பேசப்பட்ட பழைய அரசியலின் கசப்புக்கள் கடக்கப்பட்டன. மீண்டும் அந்த இடத்திற்கு திரும்புவது தமிழ் மக்களுக்கு நல்லதல்ல. பழைய இரும்புப் பூட்டுக்களினால் எதிர்காலத்திற்கான பயணத்தை பூட்டிட்டு பூட்டிவிடக்கூடாது. தற்போது ஏற்பட்டிருக்கும் கசப்பான விடயங்களை தமிழ் மக்களுக்கான நன்மையின் பேரால் இருதரப்பினரும் பேசித் தீர்த்து ஒரு புள்ளியில் ஐக்கியப்பட வேண்டும்.

இருதரப்பினரும் ஒரு கட்சியினர் அல்லர். வேறுபாடுகள் நிச்சயம் இருக்கும். ஆனால் ஓர் இலக்கைக் குறித்து அந்த குறித்த இலக்கின் பேரால் அனைவரும் ஐக்கியப்பட்டு ஒரு பலமான மாற்றுத் தலைமையை உருவாக்கத் தவறினால் போர்க்குற்ற விசாரணை என்பது சர்வதேச அரங்கில் இருந்து விலகி எதிரியின் காலடியில் வீழ்ந்துவிடும். இது உடனடிப் பிரச்சினை. ஆதலால் போர்க்குற்ற விசாரணை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் என்னும் இந்த இரண்டையும் ஒரு



புள்ளியில் நிறுத்தி அதன்பேரால் ஐக்கியப்படக்கூடிய அனைவரையும் ஒன்றிணையுங்கள். ஜெனிவாவில் மீண்டும் இலங்கைக்குக் காலஅவகாசம் வழங்க டெலோ மறுப்பு என்றும் இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வெளியில் இருக்கும் தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைத்து போராடத் தயார் என்றும் திருகோணமலையில் 17ஆம் தேதி நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு நிலைப்பாடு எடுக்கக்கூடிய கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகிவரத் தயார் என்றால் அவற்றையும் மாற்றுத் தலைமை உள்வாங்கி முன்னெடுக்கக்கூடிய தகுதியையும், ஆற்றலையும் வெளிப்படுத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து மேற்படி கொள்கையின் அடிப்படையில் வெளியேறி மாற்றுத் தலைமையில் இணைய தயாராக இருப்பவர்களையும் உள்வாங்க வேண்டும். இப்போதைய உடனடித் தேவை காற்றில் கற்பூரம் கரைவது போல தமிழ்த் தேசியக்



கூட்டமைப்பின் ஆதரவோடு போர்க்குற்ற விசாரணை சர்வதேச அரங்கில் கரைந்து போகக்கூடிய ஆபத்தைக் கொண்டுள்ளது.

முதலில் அதைக் காப்பாற்றுங்கள். கடவுளைக் கும்பிடுங்கள். ஆனால் வெடிமருந்தை நனையவிட்டுவிடாதீர்கள் என்று நெப்போலியன் கூறியது போல எல்லாவித இலட்சிய விசுவாசங்களுக்கும் அப்பால்

அதற்கான அடிப்படையை பறிபோகவிடாது முதலில் பாதுகாக்க வேண்டும். போர்க்குற்ற விசாரணை என்பதுதான் தற்போது போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஈட்டிமுனை. சரியும் தமிழ் மக்களின் குடித்தொகையையும், அதன் அடிப்படையில் பறிபோகும் அரசியல் பலங்களையும் கருத்திற் கொண்டு உள்முரண்பாடுகளை இரண்டாம் பட்சமாக்கி தமிழரின் அடிப்படைப் பலத்தைப் பேணவல்ல மாற்றுத் தலைமையை கெட்டியாகவடிவமைக்க வேண்டும்.

ஒரு பரந்த கூட்டணியைஉருவாக்க முற்படும் போது பிரச்சினைகள் எழுவது இயல்பு. இவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டும். முதலில் பரந்த கூட்டணியை உருவாக்குவதற்கு தேவையான அடிப்படை கொள்கை வரைவை உருவாக்க வேண்டும். அதன் அடிப்படையில் கூட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒரு பரந்த கூட்டணியை உருவாக்குவதற்கு ஏதுவாக தமிழீழ மண்ணில் காணப்படுகின்ற அறிஞர்கள், மதத் தலைவர்கள், பெண் தலைவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என்போரை உள்ளடக்கிய ஒரு விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும்.

இந்தக் குழு வடக்கு-கிழக்கு இரு மாகாணங்களைச் சேர்ந்தவர்களையும், கூடவே இரண்டு பெண்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு அமைவது நல்லது. மதத் தலைவர்கள், ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர்கள், பல்கலைக்கழக அறிஞர்கள், சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள்,வழக்கு ரைஞர்கள் என பலதரப்பட்ட மட்டங்களில் இருந்தும் இக்குழுவிற்குப் பொருத்த மானோரை நியமிக்கலாம்.

மாற்றுத் தலைமையை விரும்புவோர் இக்குழுவின் அறிக்கைக்கு மதிப்பளித்து நடப்பதன் மூலம் ஒரு தொடக்கப் புள்ளியை உருவாக்கிவிடலாம். பின்பு தவறுகள் காணப்படின் இந்த அறிக்கையின் அடிப்படையில் தவறிழைப்போரை சரிசெய்து கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் மாற்றுவழியுண்டு.


எனவே பிரச்சினைகளுக்கு மாற்றுவழிகளுக்கு ஊடாக தீர்வுகாண முனைய வேண்டுமே தவிர எதிரிகள் பலமடையக் காரணமாகிவிடவும் கூடாது, அதற்கு இடமளிக்கவும் கூடாது. அரசியல் முன்னெடுப்பு என்பது மனவிருப்பங்களைத் திணிப்பதல்ல.

மாறாக காணப்படும் சாத்தியக் கூறுகளைப் பொருத்தமான வகையில் ஒருங்கிணைத்து முன்னெடுப்பதாகும். உள்ளும் புறமும் எதிரிகள் பல மானவர்கள். பலமான எதிரி களைக் கையாளப் பலமான தலைமைத்துவம் வேண்டும். கூடவே அது புத்திசாலித்தனமான தலைமைத்துவமாகவும் இருக்க வேண்டும். எனவே ஒரு நாணயத்தின் இருபக்கங்களென பலமும், புத்திசாலித்தனமும் ஒருங்கிணைந்த தலைமைத்துவம் இல்லாமல் தமிழ் மக்கள் எதனையும் அடைய முடியாது.

தோல்விகளில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள தமிழ்த் தலைவர்கள் இதுவரை தயாராக இல்லை. ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக தொடர்ந்து தோல்விகளை அடைவதற்கான காரணத்தைக் கண்டு புத்திபூர்வமாக எதிர்காலத்தை முன்னெடுக்கத் தேவையான மனப்பாங்கு தமிழ் மக்கள் மத்தியில் இன்னும் உருவாக மறுக்கின்றது.

தமிழ் மக்களுக்கு ஏற்படும் தொடர் தோல்விகளுக்கு முதலில் தமிழ்த் தலைவர்கள் பொறுப்பேற்க வேண்டும். 'காலில் கல்லடித்துவிட்டது" என்று கூறும்போது, கல்லுடன் கால் மோதுண்டுவிட்டதை கணக்கில் எடுக்கத் தவறுகிறோம்.

மலையேறும் ஒருவன் ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்து வைக்க வேண்டியது அவனது பொறுப்பு. (05 பக்கம் பார்க்க...)



# சாலைகளே சமாதிகள் ஆகலாமா?

"அதிவேகமாகப் பயணிக்கும் பேருந்துகளின் அனுமதி ரத்து. போக்குவரத்து ஆணைக்குழு அதிரடி" இது பிந்திய ஒரு பத்திரிகைச் செய்தி. நாட்டின் பெரிய கொலைகாரனாக நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் வீதி விபத்துகள் அத்துமீறுவதன் எதிரொலியான ஒரு சட்ட நடவடிக்கையே இது. மனிதனுக்கு வேகத்தில் வந்த மோகத்தால் விளைந்த வினை இது! துரித உணவு, (Fast Food). வேகமான கிரிக்கெட் விளையாட்டு (ஒரு நாள் ஆட்டங்கள்) என்ற வரிசையில் வேகமாக வாகனங்களை ஓட்டுவதும் ஒருவித மனித ஈர்ப்பபே. இதன் விளைவுதான் இன்றைய வீதி விபத்துகள்.

சொகுசு வண்டிகள் என்று பெயரை வைத்து, அதையே சினிமா கொட்டகையாகவும் மாற்றி, கொஞ்சம் குளிரூட்டலையும் சேர்த்து, ஆளுக்கு ஆயிரமாக கட்டணங்கள் வசூலித்து, தூக்கக் கலக்கத்தில் வாகனங்களை ஓட்டி, அதி வேகமாக அப்பாவிப் பயணிகளை "பரலோகம்" கொண்டு செல்லும் கைங்கரியம் நடந்து கொண்டிருக்கின்றது. கொழும்பு நோக்கி பயணித்த சொகுசு பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி, மின் மாற்றி மீது மோதிச் சிதைந்து சில பயணிகளைக் கொன்று, பலரை ஊனமாக்கிய அவலம், சமீபத்தில் அரங்கேறி இருக்கின்றது.

இதற்கு முன்னர், ஒரு ஞாயிறு அதிகாலை, கொழும்பு-சிலாபம் நெடுஞ்சாலையில் ஒரு சொகுசுப் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து மோதியதால் அந்த இடத்திலேயே அறுவர் பலி! கட்டுப்பாடற்ற அதிவேகம், சாரதிக்கு போதிய உறக்கமின்மை - இதைவிட இந்த விபத்துகளுக்கு வேறு என்ன காரணம் சொல்லமுடியும்?

**பயமுறுத்தும் புள்ளி விபரங்கள்**

"இலங்கையில் ஒவ்வொரு பத்து நிமிடங் களுக்கு வீதி விபத்து இடம்பெறுகிறது. இதில் ஆறேழு உயிர்ப் பலிகளும் உள்ளடக்கம்" தலையைச் சுற்றுகிறதா? நிஜம் இதுதான். தொற்று நோயல்லாத மருத்துவப் பிரிவின் இயக்குநர் நாயகம் திலக் சிறீவர்த்தன இது பற்றிக் குறிப்பிடுகையில், பல வீதி விபத்துகள் முறையிடப்படுவதில்லை என்கிறார். தினசரி 130க்கும் மேற்பட்டவர்கள், வீதி விபத்துக்களால் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

பெரும்பான்மையான வீதிவிபத்துகள், முச்சக்கர வண்டிகளாலும், மோட்டார் சைக்கிள்களாலுமே ஏற்பட்டு வருகின்றன. வீதி பாதுகாப்பிற்கான தேசிய சபையின் ஓர் அறிக்கையின்படி, 2017 ஜனவரி தொடக்கம் ஜூன் வரையான ஆறு மாத காலப் பகுதியில் 18,980 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. ஒரு மாதத்திற்கு சராசரியாக 3000க்கும் குறையாத வீதிவிபத்துகள்! இதில் 1,473 வீதி விபத்துகள் 1,547 பேரின் உயிர்களைப் பறித்துள்ளன. 4,062பேர் படுகாயமடைந்துள்ளார்கள். 15,340பேர் சிறுகாயங்களோடு தப்பியிருக்கிறார்கள்.

வருடமொன்றிற்கு 20,000 பேர் வரை வீதி விபத்துக்கள் பலியெடுக்கின்றன. இது மாதிரிக்கு ஒரு கணக்கு! நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக அதிகரித்து சாலைகளை அடைக்கும் வாகன நெரிசல் அடுத்தடுத்த வருடங்களில் எவ்வளவு வீதிவிபத்துக்களைச் சந்தித்தன என்பது புளளிவிபரங்கள் கிடைத்தால்தான் தெரியவரும். வேகம் விவேகமானதல்ல என்பது ஏன் இவர்க ளுக்குப் புரிவதில்லை. இள இரத்தங்களுக்கு "அக்ஸிலேட்டரை" முறுக்காமல் தமது வாகனங் களைச் செலுத்த மனம் வருவதேயில்லை. அது மக்கள் நடமாடும் ஒழுங்கைகளாக இருந்தா லென்ன, வாகன நெரிசலுள்ள பிரதான சாலை களாக இருந்தாலென்ன, "முறுக்கலுக்கே" ஆசைப் படுகிறார்கள் இந்த "முற்றாத" இளம் பிஞ்சுகள்!

**அக்கரை வேகங்கள்**

நமது தாய்த்திருநாட்டை நினைத்து நொந்து கொண்டிருக்கும் அதே சமயம், அந்நிய நாடுகளில் இந்த விபத்துக்கள் எப்படி இருக்கின்றன என்பதை அறிந்து கொள்வது நமக்குப் பயனுள்ளதாக இருக்கலாம். இந்த் சாலை விபத்துக்களில் உச்சத்தில் இருக்கும் உலக நாடுகள் பட்டியலைப் பார்ப்போம். இந்தத் தகவலை உலக சுகாதார அமைப்பு எம்முடன் பகிர்ந்து கொள்கின்றது.

விபத்துகளில் முதலாவது இடத்தைப் பிடிக்கும் சம்பியன் நாடு நமீபியா என்ற ஓர் ஆபிரிக்க நாடு! வருடத்தில் 100,000 பேருக்கு 45 பேர் கொல்லப்படுகின்றனர். அடுத்த இடத்தில் இருப்பது ஈரான்.

இவைகளைத் தொடர்ந்து மேலும் இரு ஆபிரிக்க நாடுகளான சூடானும், சுவாஸி லாந்தும் பட்டியலில் இடம் பெறுகின்றன. அடுத்து வருவது தென்னமெரிக்க நாடான வெனிசூலா. தொடர்வது கொங்கோ, மலாவி என்ற இரு ஆபிரிக்க நாடுகள். அடுத்து ஈராக் இணைந்து கொள்கின்றது. எனவே அநேகமாக ஆபிரிக்க நாடுகள்தான் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதில்லை. வீதி விபத்துகள் இங்கு பெருகுகின்றன என்பது நமக்கு நன்றாகவே புரிகிறது. கெட்டவன் யாரென்று தேடிப் பார்க்கும்போது, நல்லவர்கள் பட்டியலையும் அறிவது புத்தி சாலித்தனமானதல்லவா? ஒழுங்கான "சாலை ஓட்டக்காரர்கள்" என்ற பட்டியலில், சம்பியனாக எந்த ஐரோப்பிய நாடும் வரவில்லை. நான்கு தீவுப் பிராந்தியங்களை உள்ளடக்கிய மேற்கு பசுபிக் தீவு நாடான மைக்ரோனேசியாவே (Micronesia) முதலிடம் பெறுகின்றது. ஒவ்வொரு 100,000 பேரில் 1.9 மரணங்களே வீதி விபத்தில் ஏற்படுகின்றனவாம். 2015இல் இருவர் மாத்திரமே வீதிவிபத்தில் உயிரிழந்தனர். இப்படி இலங்கையும் மாறாதா என்று அடிமனதில் ஓர் ஆசை எழுகின்றது. தமிழர் மனதில் இப்படி பற்பல ஆசைகள் காலத்திற்குக் காலம் முளைவிடுகின்றன. ஆனால் இவற்றில் எவை செயற் படுத்தப்படுகின்றன? எல்லாமே முளையில் கருகும் பயிர்களின் நிலைதான்.சரி ஒழுங்கான நாடாக, இரண்டாவதாக வருபவது சுவீடன். மூன்றாவது இடத்தை இரண்டு நாடுகள் பிடிக்கின்றன. பிரிட்டனும் கிரிபற்றி (Kiribati) என்ற மத்திய பசுபிக் பிராந்திய தீவு நாடுமே இந்த இடத்தைப் பங்குபோட்டுக் கொள்கின்றன. அடுத்து வருவது வட மத்திய இத்தாலியிலுள்ள குட்டி நாடான சென் மரீனோ. தொட ரும் நாடுகள் சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, மாலைதீவுஃடென்மார்க், சிங்கப்பூர்ஃஇஸ்ரேல். ஒழுங்கான பிள்ளைகளையும், குழப்படிப் பிள்ளைகளையும் இப்பொழுது உங்களால் ஓரளவு அறிந்து கொள்ள முடிகின்றது.

**வீதிகள் விழுங்கும் உயிர்கள்**

இந்தப் புள்ளி விபரங்களை சற்றே நோக்குங்கள். சென்ற வருட இறுதியில் இணையத்தில் வெளி யான புள்ளிவிபரங்கள் இவை. ஐ.நா. சபையின் நிலையான அபிவிருத்தி (Sustainable Development) என்ற பிரிவு சமர்ப்பித்த புள்ளி விபரங்களே இவை! தமது எதிர்காலத் திட்டங்களை இவர்கள் அடிக்கடி வெளிப்படுத்தி, செயற்படுத்தியும் வருகிறார்கள்.

இவர்களது 2030 இற்கான திட்ட நோக் கில், உலக வீதி விபத்துக்களை 2020இற்குள் பாதியாக்குவது என்ற திட்டமும் உள்ள டங்கி இருக்கின்றது. வீதி விபத்துக்கள், பெரும் மையான நாடுகளின் உற்பத்திகளில் 3 வீதத்தை அழித்து விடுவதை இவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அதிக விபத்துக்கள் உந்துருளி, ஈருளி ஓட்டுபவர்களையும், பாதசாரிகளையுமே பாதிப்பதையும் இவர்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

93வீதமான மரணத்தை உண்டுபண்ணும் வீதி விபத்துக்கள் குறைந்த, நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில்தான் நடப்பதாகவும், இங்கு 60 வீதமானவர்களிடமே வாகனங்கள் இருக்கின்றன என்பதையும் இவர்கள் வெளிச்சம்போட்டு காண்பிக்கத் தவறவில்லை. இந்த விபத்துக்களால் காயப்பட்டு மரணிப்பவர் வயது 5-29 என்பதும் இவர்கள் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

வீதிப் பாதுகாப்பு பற்றி சமீபத்தில் "டெய்லி மிரர்" பத்திரிகை, வீதிப் பாதுகாப்பு, போக்குவரத்து நிர்வாகத்திற்கு டி.ஐ.ஜி. ஆக இருந்து பதவி ஓய்வு பெற்ற கமிலஸ் அபேகுணவர்த்தன என்பவரை பேட்டி கண்டபோது கிடைத்த தகவல்கள்தான் இவை. ஒவ்வொரு 3 மணி நேரத்திற்கு ஒரு தடவை ஒரு விபத்து பற்றிய முறைப்பாடு கிடைக்கின்றது. இந்த விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டோ அல்லது இருவர் படுகாயமுற்றோ இருப்பதுண்டு.

2018இல் 3,164பேர் வீதி விபத்துகளில் மரணமாகினர். இதில் இறந்தவர் ஒன்றில் சாரதியாகவோ அல்லது அவருக்குப் பின்னால் உட்கார்ந்து பயணித்தவராகவோ இருக்கிறார். 930 பேர் பாதசாரிகளாக இருக்கிறார்கள். 423 பேர் காரிலோ அல்லது வேறு வாகனங்களிலோ கூடவே பயணித்தவர்கள். ஈருளியில் வந்து விபத்தில் சிக்கியவர்கள் 251பேர்... இப்படி விலாவாரியாக விபத்தில் சிக்கியவர்களைப் பிரித்துப் பிரித்துச் சொல்லியிருக்கிறார் இந்தப் பதவி ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி.

சாலைகளே சமாதிகளாகும் இந்த அவலம் என்று நிற்கப்போகின்றது?

# தொற்று நோய்களின் உலகம்! 10

வி.ராமசுப்பிரமணியன்,
தொற்றுநோய் சிறப்பு மருத்துவர்.



‘இந்தக் காரணத்தால்தான் இந்த நோய் பரவுகிறது’ என்று கண்டறியாத காலங்களில் வழங்கப்பட்ட சிகிச்சை முறைகள் மிகவும் அதிர்ச்சியளிக்கக் கூடியவை. யூகத்தின் அடிப்படையில் நோயைக் கணித்து, இரசாயனங்களை அப்படியே சாப்பிடக் கொடுப்பார்கள். 1885 ஆம் ஆண்டுக்கு முன்னர், மெர்க்குரி, சில்வர், ஆர்செனிக் போன்ற இரசாயனங்களை மருந்தாகப் பயன்படுத்தியதாகத் தரவுகள் இருக்கின்றன. குறிப்பாக, ‘சிபிலிஸ்’ (Syphilis) நோய்க்கு மெர்க்குரியைத்தான் மருந்தாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். நோயால் இறந்தவர்களைவிட, நோய்க்குக் கொடுத்த ‘மருந்தால்’ இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகம்.

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் பல நோய்கள் இனம் காணப்பட்டன. அதன் பிறகுதான் அந்தந்த நோய்களுக்குரிய மருந்துகளைக் கண்டறியும் பணி தொடங்கியது. இப்போது பயன்படுத்தப்படும் அன்ரிபயோடிக் மருந்துகள் அனைத்தும் பூஞ்சைகள் மூலமாகவோ, பக்றீரியாக்கள் மூலமாகவோ உருவாக்கப்பட்டவை. ஆனால், முதன்முதலில் கண்டறியப்பட்ட நோய் எதிர்ப்பு மருந்தான சல்ஃபா (Sulfa), சில்வரைப்போல, மெர்க்குரியைப்போல முற்றிலும் இரசாயனம் கொண்டு உருவாக்கப்பட்டதுதான்.

இதைப்போல சில்வரிலிருந்து ஒரு நோய் எதிர்ப்பு மருந்து உருவாக்கப்பட்டது. இவை இரண்டும்தான் தொடக்கக் காலத்தில் உருவாக்கப்பட்ட அன்ரிபக்றீரியா மருந்துகள்.

இன்றைய நோய் எதிர்ப்பு மருத்துவத்துக்கு அழுத்தமாக விதையூன்றி, பல அரிய மருந்துகள் உருவாகக் காரணமாக இருந்தவர், மருத்துவ மேதை அலெக்சாண்டர் பிளெமிங் (Alexander Fleming). இவரது காலம் 1881 - 1955.

லூயி பாஸ்ரர் தன் காலத்தில் செய்திருந்த கிருமிகளின் வளர்ச்சி குறித்த ஆய்வுகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் சென்றவர் அலெக்சாண்டர் பிளெமிங். கிருமிகளை வளர்க்கும் நுட்பம் பிளெமிங் காலத்தில் கண்டறியப்பட்டுவிட்டது.

ஆனால், ‘அந்தக் கிருமிகளை எப்படி அழிப்பது?’ என்று கண்டறியப்படவில்லை. பிளெமிங் தனது ஆய்வுகூடத்தில் ‘ஸ்ட்ரெப்டோகாக்கஸ்’ (Streptococcus) என்ற கிருமியை வளர்த்து, அது தொடர்பாக ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார். ஒருமுறை, நான்கைந்து நாள் விடுமுறையில் வெளியூருக்குச் சென்றுவிட்டார் பிளெமிங். விடுமுறை முடிந்து வந்து தன் ஆராய்ச்சியைத் தொடர்ந்தார்.

அப்போது, ‘ஸ்ட்ரெப்டோகாக்கஸ்’ கிருமியை வளர்த்த இடத்தில் ஒரு வித்தியாசத்தைக் கவனித்தார். சில இடங்களில் அந்தக் கிருமி நன்கு வளர்ந்திருந்தது. சில இடங்களில் வளரவேயில்லை. பிளெமிங்கின் மூளைக்குள் பளீரென விளக்கு எரிந்தது. ‘ஏன் சில இடங்களில் அந்தக் கிருமி வளரவில்லை?’ என்று ஆராய்ச்சியைத் தீவிரப்படுத்தினார்.

பெனிசிலியம் (Penicillium) என்ற பூஞ்சை வளர்ந்திருந்த இடங்களிலெல்லாம் ‘ஸ்ட்ரெப்டோகாக்கஸ்’ கிருமி வளரவில்லை. பெனிசிலியம் வளர்ந்த இடங்களில் ஏன் ‘ஸ்ட்ரெப் டோகாக்கஸ்’ கிருமி வளரவில்லை



என்று ஆராய்ந்தார். பெனிசிலியம் உருவாக்கும் ஒருவிதப் பொருள், ‘ஸ்ட்ரெப்டோகாக்கஸ்’ கிருமியை வளரவிடாமல் தடுக்கிறது என்பது விளங்கியது.

ஒரு பூஞ்சை உருவாக்கும் பொருளானது, கிருமிகளை வளரவிடாமல் தடுக்கக்கூடிய வல்லமையைப் பெற்றிருக்கிறது என்ற உண்மை அந்தத் தருணத்தில் புலப்பட்டது. பெனிசிலியம் உருவாக்கிய அந்தப் பொருள்தான் பெனிசிலின் (Penicillin). மருத்துவ உலகின் போக்கையே புரட்டிப்போட்ட கண்டுபிடிப்பு அது.

முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட, ஓர் உயிர்ப்பொருள் உருவாக்கக்கூடிய நோய் எதிர்ப்பு மருந்து இதுதான். இதற்குப் பிறகு நோய் எதிர்ப்பு மருத்துவத்தில் பல கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தன. படிப்படியாக அந்த வளர்ச்சியைப் பார்க்கலாம்!

- களைவோம்

# முத்தச் சிலைக்கும் ‘மீ ரூ’....!






உலகப் புகழ்பெற்ற முத்தச் சிலையின் கால்களில் மீ ரூ (me Too) எழுதிய குறும்பர்களை அமெரிக்கப் பொலிஸார் வலைவரித்து வருகின்றனர்.

அது இரண்டாம் உலகப் போர் காலம். அணுகுண்டுகளால் கதிகலங்கிப் போன ஜப்பான் தனது சரணடைவை அறிவிக்கிறது. ரைம்ஸ் சதுக்கத்தில் ஒன்றிணைந்த அமெரிக்க மக்கள் ஆர்ப்பரிக்கின்றனர். அப்போது அங்கிருந்த இராணுவ வீரர் ஒருவர் தனக்கு அருகில் நின்ற தாதி ஒருவரை கட்டியணைத்து முத்தமிடுகிறார்.

இந்தக் காட்சியைப் பத்திரிகையாளரான அல்பிரட் எய்சென்ஸ்டொட் படம் பிடித்துவிடுகிறார். இந்தப் படம் ‘தி கிஸ்’ (The Kiss) என்ற தலைப்பில் வார இதழ்களில் வெளியாகிப் பெரும் புகழைப் பெற்றது. உலகப் போர் வெற்றியை பறைசாற்றி விரும்பிய அமெரிக்கா புளோரிடா மாகாணத்தில் தி கிஸ் இணைக்கு சிலை அலுமினியச் சிலையை நிறுவியது.

முத்தம் வாங்கிய தாதி கிரேற்றா பிரட்மென் 2004 இல் வழங்கிய நேர்காணல் ஒன்றில் ‘யுத்தம் முடிந்தது என்ற செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தேன். நிலை தடுமாறி விழப்போன என்னை அருகில் நின்ற இராணுவ வீரர் தாங்கிப் பிடித்தார். அச்சமயத்திலேயே நான் சற்றும் எதிர்பார்க்காத தருணத்தில் முத்தமிட்டார்.” என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் கிரேற்றா பிரட்மன் கடந்த ஞாயிற்றுக்கிழமை - பெப்ரவரி 24 அன்று மரணமானார். மீ ரூ இயக்கம் அண்மைக்காலத்திலேயே பிரபலமாகியிருந்தது. இந்நிலையிலேயே கிரேற்றா பிரட்மனுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக குறும்பர்கள் சிலர் சிலையின் காலில் ‘மீ ரூ’ என எழுதியுள்ளனர்.



# சொல்லேர் உழவு - 20

கவிஞர் மகுடேசுவரன்



## தற்காப்பு, தற்பெருமை தெரியும்... தற்படம் தெரியுமா?

தான், தன் என்னும் இரண்டு சொற்களை அறிவீர்கள். தான் என்பது படர்க்கை ஒருமைப் பெயர். "தான் என்ன பேசுகிறோம் என்பது தெரியாமல் பேசினான்" என்னும்போது அங்கே தான் என்பது படர்க்கையிடத்திலுள்ள ஒருமையைக் குறிக்கிறது.

தான் என்பதற்கு ஆண்பால், பெண்பால் வேறுபாடு இல்லை. "தான் நினைப்பதைச் செய்து முடித்தே பழக்கப்பட்டவள் அவள்" என்னும்போது அங்கே தான் என்பது பெண்பாலுக்கும் பொருந்துகிறது.

தான் ஓடினால்தான் தப்பிக்க முடியும் என்று அந்த மான் நினைத்தது – இந்தச் சொற்றொடரைப் பாருங்கள். இங்கே தான் என்பது படர்க்கை ஒருமையில் மானைக் குறிக்கிறது.

ஆண்பால், பெண்பால் உயர்திணைக்கும் வந்தது. மான் என்னும் ஒன்றன்பாலில் அஃறிணைக்கும் வந்தது. தான் என்னும் அச்சொல் அத்துணை வலிமையானது. எழுதுவோர்க்கும், உரியவாறு விளக்கிப் பேசுவோர்க்கும் தான் என்னும் சொல் நன்கு பயன்படும். தான், தன் போன்ற சொற்களை எழுத்திலும் பேச்சிலும் நன்கு பயன்படுத்துவோரை நான் நல்ல மொழிப்பயிற்சி பெற்றுள்ளவர்களாக மதிப்பேன்.

பேச்சு வழக்கிலும் தான் என்பதனைப் பலவாறு பயன்படுத்துவார்கள்.

'தான் புடிச்ச முயலுக்கு மூணு காலுன்னு நினைக்கறான்'

'தானே பொண்ணு பார்த்துக் கட்டிக்கிட்டான்'

'தான் பண்றதை ஒருத்தருமே குறை சொல்லக்கூடாதுன்னு அவளுக்கு நினைப்பு'

தான் என்னும் சொல் எல்லாவிடங்களிலும் நன்றாகப் பயன்படுகிறது. தான் தான் என்றே எப்போதும் சொல்ல முடியுமா ? பெயர்ச்சொல் என்று வந்தாலே அது பல்வேறு சொல்லுருபுகளை ஏற்க வேண்டும். ஐ, ஆல், கு, இன், அது, கண் ஆகிய வேற்றுமை உருபுகளை ஏற்க வேண்டும். அப்போதுதான் ஒரு சொற்றொடரில் முழுமையாகப் பொருளுணர்த்தி நிற்க முடியும்.

தரன் என்ற சொல் ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்று ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அது என்னாகும் ?

தான்ஐ அழைக்கும்படி கூறினான்.

தன்னை அழைக்கும்படி கூறினான்.

இங்கே தான் என்பது தன் என்று மாறிவிடும். தான் என்னும் படர்க்கை ஒருமைப்பெயர் வேற்றுமை உருபுகள் உள்ளிட்ட ஏதேனும் செல்லுருபை ஏற்கும்போதோ, அல்லது புதுச்சொல்லாக்கத்திற்கு உடன்படும்போதோ தன் என்று மாறிவிடும்.

தான் + ஐ என்பது தானை என்று ஆகாது. தன்னை என்று ஆகும். வேற்றுமை உருபு வரும்போது தான் என்பது தன் என்று மாறிவிடும்.

தான் + ஐத் தான் காக்கின் சினங்காக்க. இதனை எப்படி எழுத வேண்டும் ?

தன்னைத் தான் காக்கின் சினங்காக்க என்று எழுத வேண்டும்.

தன்னை, தன்னால், தனக்கு, தன்னில், தனது, தன்கண் என்று வேற்றுமை உருபுகள் ஏற்றப்படும். தானை, தானால், தானக்கு என்று எப்போதும் தோன்றுவதில்லை.

தான் என்பது எழுவாயாக நிற்கையில் அடுத்து வரும் பயனிலை வினைச்சொல்லுக்குத் தான் என்பது எவ்வித மாற்றமும் பெறாமல் அப்படியே நிற்கும்.

தான் அடைந்த செல்வம் என்பதைத் 'தானடைந்த செல்வம்' என்று புணர்த்தி எழுதலாம். தான் எழுதிய கட்டுரையை மீண்டும் படித்துப் பார்த்தான் என்பதனையும் புணர்த்தலாம். 'தானெழுதிய' என்று எழுதலாம். 'தானாக' வந்தான் எனலாம்.

தான் என்ற சொல் தன் என்று திரிவதை விளங்கிக்கொண்டால் எண்ணற்ற புதுச் சொற்களை ஆக்கலாம். அப்படித்தான் ஆக்கினார்கள்.

சங்க இலக்கியத்தில் தற்கொலை என்ற சொல்லைக் காண முடியுமா? அன்பும் அறனுமே வாழ்வின் பயனாக வாழ்ந்தோர் நடுவில் கொலை என்பதே கொடுஞ்சொல். அதனினும் கொடிய சொல்லான தற்கொலைக்கு அங்கே என்ன சூழல் இருக்க முடியும் ? தற்கொலை என்பது தற்காலக் கொடுமை.

பிறிதொன்றைக் கொல்வது கொலை என்றால் தானே தன்னைக் கொல்வதை என்னவென்று சொல்வது ? இங்கேதான் தன் என்ற சொல் உதவுகிறது. தன்னைத்தானே செய்யும் கொலை என்னும் பொருளில் 'தன் கொலை ஸ்ரீ தற்கொலை' என்று புதுச்சொல் படைக்கிறோம். தன் என்பதை முன்னொட்டாகக்கொண்டு நூற்றுக்கணக்கான சொற்களைத் தோற்றுவிக்கலாம்.

தன்னைத்தான் காத்துக்கொள்வது தற்காப்பு

தனக்குத்தானே பெருமைப்பட்டுக்கொள்வது தற்பெருமை


எவ்விதத் தூண்டலுமின்றித் தானாக நிகழும் செயல் தற்செயல்

தானாற்றியதால் தன்னை விட்டு நீங்காத வினை தன்வினை (தன்வினை தன்னைச் சுடும்)

தன்னைத் தானே எடுத்துக்கொள்ளும் படம் தற்படம் (செல்பி)

# உலகின் சிறந்த ஆசிரியராக ஈழத் தமிழச்சியும் தெரிவு

— சிவரதன் —



உலகின் தலைசிறந்த பத்து ஆசிரியர்களுள் ஒருவராக அவுஸ்ரேலியாவில் வசிக்கும் இலங்கை தமிழ் பெண்ணான யசோதை செல்வகுமாரன் தெரிவாகியுள்ளார். இவ்விடயம் மிகவும் உன்னதமானதாகப் பார்க்கப்படுகின்றது. இலங்கைத் தமிழர் என்ற முறையில் எமக்கும் மிகவும் பெருமை சேர்கின்ற விடயமாக இது அமைகின்றது.

முன்னதாக உலகின் தலைசிறந்த ஐம்பது ஆசிரியர்கள் என்ற நிலையை எட்டிய இவர், தற்பொழுது பத்து ஆசிரியர்களுள் ஒருவராக முன்னேறி சாதனை படைத்துள்ளார். இந்த வெற்றியானது அவுஸ்ரேலியாவுக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாக கருதப்படுவதாக அந்த நாட்டு தொலைக்காட்சிகள் உள்ளிட்ட ஊடகங்கள் பலவும் இந்த ஈழத்தமிழச்சியை வெகுவாக பாராடுகின்றது. உலகின் தலை சிறந்த ஆசிரியர்களில் முதலாவதாக ஐம்பது இடங்களுக்குள்ளும், தற்பொழுது பத்து இடங்களுக்குள்ளும் யசோதை முன்னேறியமை அளப்பெரும் சாதனை என அந்த ஊடகங்கள் புகழ் மாலை பொழிகின்றன.

பத்து இறுதி தேர்வாளர்களில் முதலாவது நிலையினை பெரும் போது ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை இவர் பரிசாகப் பெறுவதற்கு வாய்ப்புண்டு. எதிர்வரும் மார்ச் 24 ஆம் நாளன்று இந்த சாதனைக்கான பரிசுத்தொகை முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு டுபாயில் வைத்து வழங்கப்படும். இந்த வாய்ப்பும் இவருக்கே பெரும்பாலும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(05 பக்கம் பார்க்க...)

# கொரியாவின் கதை #15



# குட்டித் தீவுக்காக ஓடிய இரத்த ஆறு

கொரில்லாப் போராளிகளின் திடீர் தாக்குதல்கள் தேர்தல் நடவடிக்கைகளை தோல்வியடையச் செய்தது. தென்கொரியா தேர்தலில் ஜெஜு தீவில்தான் மிகக் குறைவான வாக்குகள் பதிவாகின. இதையடுத்து, இந்தத் தீவுக்கான இரண்டு இடங்களும் வெற்றிடமாகவே இருக்கின்றன என அறிவிக்கப்பட்டது. தேர்தலை திட்டமிட்டபடி நடக்காமல் செய்ததில் கொரில்லாக்கள் வெற்றிபெற்றனர். இது அமெரிக்கா இராணுவத்தை ஆத்திரப்படுத்தியது. கப்பல் படைக்கு சொந்தமான ஜான் ஆர் கிரெய்க் என்ற போர்க்கப்பலை ஜெஜு தீவு அருகே கொண்டுவந்து நிறுத்தியது. வடகொரியாவிலிருந்த கொரில்லாக்களுக்கு ஆதரவு கிடைத்துவிடாமல் தடுப்பதற்காக அந்தக் கப்பல் நிறுத்தப்பட்டது.

கொரில்லாக்கள் தங்கள் நடவடிக்கைகளை ஒத்திவைத்திருந்துவிட்டு, 1948 ஓகஸ்ட்டில் வடகொரியாவில் சோவியத் யூனியன் மேற்பார்வையில் தேர்தலை நடத்தி முடிந்தவுடன், மீண்டும் தாக்குதலை நடத்தினர். ஜெஜு தீவுக்கும் சேர்த்தே இந்தத் தேர்தல் நடைபெற்றது. தென்கொரியாவில் தேர்தல் முடிந்தவுடன் நிலைமை மேலும் தீவிரமடைந்தது. ஜெஜு தீவில் கொரில்லாக்களை ஒழித்து தீவைக் கைப்பற்றும் நடவடிக்கையை ஜனாதிபதியாகத் தெரிவான சிங்மேன் ரீ தொடங்கினார்.

1948 நவம்பர் 17 ஆம் திகதி இராணுவச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார் சிங்மேன் ரீ. இந்தக் காலகட்டத்தில் ஜெஜு தீவில் ஏராளமான யுத்தக் குற்றங்கள் நிகழ்ந்திருப்பது சமீப ஆண்டுகளில் வெளியான அறிக்கைகளில் தெரியவந்துள்ளன. இந்தக் குற்றங்கள் அனைத்திலும் அமெரிக்காவுக்கு முக்கியத் தொடர்பு இருப்பதை மறைக்கும் முயற்சிகள் நடைபெற்றாலும் அது முடியவில்லை.

1948 டிசம்பர் 14 ஆம் திகதி ஜெஜு தீவில் உள்ள சிறிய கிராமத்தில் இருந்த முதியவர்களை அழித்துவிட்டு, இளைஞர்களையும், இளம் பெண்களையும் கடத்திய அமெரிக்க இராணுவம், பெண்களை இரண்டு வாரங்கள் கொடூரமான வன்புணர்வுக்கு ஆளாக்கி, பிறகு எல்லோரையும் கொன்றது.

ஜெஜு தீவைக் கைப்பற்றும் முயற்சியில் அமெரிக்கா இராணுவம் எப்படி வெற்றி பெற்றது என்பது குறித்து உண்மை அறியும் குழு பல்வேறு கட்டங்களாக நடத்திய விசாரணையில் கொடூரமான பல உண்மைகள் வெளிவந்து உலகையே அதிரவைத்தன.

ஜெஜு தீவில் இருந்த 90 வீத கிராமங்களையும் வீடுகளையும் முற்றாக அழித்துவிட்டு, 30 ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவி மக்களை கொன்றுவிட்டு, கொரில்லாக்களை எரித்து அழித்துவிட்டு, வெறும் தீவை மட்டுமே அமெரிக்க இராணுவம் ஜெஜு தீவைக் கைப்பற்றி தென்கொரியா அரசிடம் கொடுத்திருக்கிறது.

ஜெஜு தீவில் அமெரிக்கா இராணுவம் தென்கொரியாவுக்காக நடத்திய இந்த அட்டூழியத்தை எதிர்த்தே வடகொரியா தென்கொரியா மீது போர் தொடுத்தது. தென்கொரியாவில் அமெரிக்க இராணுவம் நடத்திய அட்டூழியங்களுக்கு பின்னணியில் சீனாவின் உள்நாட்டுப்போர் காரணமாக இருந்தது.

சீனாவில் மன்னராட்சியை முடக்கிய பிறகு பல தேசிய அரசுகள் அமைந்தன. சன் யாட் சென் சோவியத் உதவியை கேட்டார். சன் யாட் சென்னுக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இணைத்தே சோவியத் ஆதரவு கிடைத்தது. சன் யாட் சென்னுக்கு அடுத்த இடத்தில் இருந்த சியாங்கே ஷேக்கின் கை ஓங்கியது. அவர் மாவோ தலைமையிலான கம்யூனிஸ்ட்கள் சன் யாட் சென்னின் மூன்று கோட்பாடுகளை ஏற்கமறுப்பதாக குற்றம்சாட்டினார்.

சோவியத்தின் ஆணைப்படியே கம்யூனிஸ்ட்கள் செயற்படுவதாகக் குறைகூறினார். இதையடுத்து சன்யாட்சென்னின் குவாமிங்டாங் கட்சிக்கும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே பிளவு ஏற்பட்டது. இதையடுத்து குவாமிங்டாங் கட்சியிலிருந்த கம்யூனிஸ்ட்கள் வெளியேற்றப்பட்டனர். ஏராளமானோர் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

கம்யூனிஸ்ட் புரட்சி ஏற்படுவதற்கு முன், தேசிய வாத புரட்சியை சியாங்கே ஷேக் முன்னெடுத்தார். இதையடுத்து தேசிய வாத புரட்சிகர இராணுவத்துக்கு போட்டியாக செஞ்சேனை உருவாக்கப்பட்டது. சீனாவின் பல பகுதிகளை இரண்டு இராணுவமும் படிப்படியாக தங்கள் ஆளுகைக்கு உட்படுத்தி வந்தன. 1928 ஆம் ஆண்டு கிழக்கு சீனாவில் முன்னேறி, பீஜிங்கை கைப்பற்றி அரசாங்கம் அமைக்கப்பட்டது. அந்த அரசுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தது.

அதேசமயம் மாவோ, சூ என் லாய், டெங் ஸியோ பிங் ஆகியோர் தலைமையில் சீனாவின் பல பகுதிகளில் இருந்து செஞ்சேனையின் நெடிய பயணம் தொடங்கியது. செஞ்சேனைக்கும் தேசிய வாத இராணுவத்துக்கும் பல பகுதிகளில் சண்டை நடந்தது. பல இடங்களில் மக்கள் படையை எதிர்க்க முடியாமல் தேசிய வாத இராணுவம் செஞ்சேனையுடன் இணைந்தது.


சீனாவின் பல பகுதிகள் கம்யூனிஸ்ட்களின் கையில் வந்த நிலையில், சீனா மீது ஜப்பான் இரண்டாவது யுத்தத்தைத் தொடங்கியது. நவீன ஆயுதங்களுடன் கூடிய ஜப்பான் இராணுவம் தேசிய வாத அரசின் இராணுவத்தின் எதிர்ப்பை வடக்கு மற்றும் கடலோர சீனாவின் பகுதிகளில் தோற்கடித்து முன்னேறியது.

இந்த ஆபத்தான நிலையிலும் சீன கம்யூனிஸ்ட் கட்சியும், தேசியவாத அரசு இராணுவமும் மோதல் போக்கைத் தொடர்ந்து கொண்டிருந்தன. இதையடுத்து, கம்யூனிஸ்ட் கட்சியை சோவியத் யூனியனும், சியாங்கே ஷேக்கை அமெரிக்காவும் சமரசம் செய்தன. அதைத் தொடர்ந்து, சீனாவைத் தாக்கிய பொது எதிரியை வீழ்த்த சீன கம்யூனிஸ்ட் கட்சியும், தேசியவாத இராணுவமும் இணைந்த தாக்குதலை தொடுத்தன.

(இன்னும் வரும்)

ஜெஜு தீவைக் கைப் பற்றும் முயற்சியில் அமெரிக்கா இராணுவம் எப்படி வெற்றி பெற்றது என்பது குறித்து உண்மை அறியும் குழு பல்வேறு கட்டங்களாக நடத்திய விசாரணையில் கொடூரமான பல உண்மைகள் வெளி வந்து உலகையே அதிரவைத்தன. ஜெஜு தீவில் இருந்த 90 வீத கிராமங்களையும் வீடுகளையும் முற்றாக அழித்துவிட்டு, 30 ஆயிரத்துக்கும் அதிகமான அப் பாவி மக்களைக் கொன்று விட்டு, கொரில்லாக் களை எரித்து அழித்து விட்டு, வெறும் தீவை மட் டுமே அமெரிக்க இராணுவம் ஜெஜு தீவைக் கைப்பற்றி தென்கொரியா அரசிடம் கொடுத்திருக்கிறது.





## இரட்டை வேடத்தில் ரஜினி

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் படத்தில், இரட்டை வேடங்களில் ரஜினிகாந்த் நடிக்கவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தப் படத்தில், நயன்தாராவை நாயகியாக நடிக்க வைக்கப் பேச்சு நடக்கிறது. இந்நிலையில், இப்படத்தில், ரஜினி இரட்டை வேடங்களில் நடிப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. சமூக ஆர்வலராக ஒரு கதாபாத்திரத்திலும், பொலிஸ் அதிகாரியாக மற்றொரு கதாபாத்திரத்திலும் ரஜினி நடிக்கிறார் எனக் கூறுகின்றனர்.

ஷங்கர் இயக்கத்தில் வெளியான 'எந்திரன்' படம்தான் ரஜினி இரட்டை வேடங்களில் நடித்த கடைசிப்படம். அதன்பிறகு வெளியான '2.0' படத்தில் மூன்று வேடங்களில் ரஜினி நடித்தார்.

## கார்த்தியின் புதிய படம்

தேவ் படத்தைத் தொடர்ந்து பாக்கியராஜ் கண்ணன் இயக்கத்தில் நடிக்கவுள்ளார் கார்த்தி. ட்ரீம் வாரியர் நிறுவனம் தயாரிக்கவுள்ள இப்படத்தின் நாயகியாக ராஷ்மிகா மண்டன்னா ஒப்பந்தமாகியுள்ளார்.

உணர்வுபூர்வமான, அதிரடி, நகைச்சுவை கலந்த கதையாக இப்படம் உருவாகவுள்ளது. இதற்காக சென்னையில் பிரம்மாண்டமான பல அரங்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், தமிழ்நாட்டில் பல இடங்களிலும், ஹைதராபாத்தில் அரங்குகள் அமைத்தும் படப்பிடிப்பு நடத்த படக்குழு திட்டமிட்டுள்ளது.

## 13 ஆண்டுகளின் பின் சேரும் ஜோடி

புதிய படம் ஒன்றில் மாதவன் – அனுஷ்கா இணைந்து நடிக்கவுள்ளனர். 2006ம் ஆம் ஆண்டு இயக்குநர் சுந்தர் சி இயக்கத்தில் வெளிவந்த ரெண்டு திரைப்படத்தில் அனுஷ்கா – மாதவன் இணைந்து நடித்தனர். அதற்கு பிறகு இவர்கள் இருவரும் சேர்ந்து நடிக்கும் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

அனுஷ்கா வெளிநாடு சென்று தனது உடல் எடையை குறைத்து வந்திருக்கிறார். இதற்கு பிறகு அவருக்கு பட வாய்ப்புகள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கின்றன. இந்த படத்தில் மாதவன், அனுஷ்காவுடன் அஞ்சலி, ஷாலினி பண்டே உள்ளிட்டோர் நடிக்கின்றனர். இந்த படம் தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிகளில் நேரடியாக எடுக்கப்பட்டு வெளியாகவுள்ளது.



## மல்யுத்தம் கற்கும் ஐஸ்வர்யா

தெலுங்கில் நடிக்கவுள்ள புதிய படத்துக்காக மல்யுத்தப் பயிற்சி பெற்று வருகிறார் ஐஸ்வர்யா ராஜேஷ். இதன் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளது. கிரிக்கெட் கற்று ஐஸ்வர்யா ராஜேஷ் நடித்த 'கனா' படம் பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது கிரிக்கெட் பயிற்சியைத் தொடர்ந்து மல்யுத்தப் பயிற்சியை ஐஸ்வர்யா ராஜேஷ் பெறவுள்ளார்.

இதேவேளை, விஜய் தேவர கொண்டாவின் படமொன்றில் நடிக்கவும் ஐஸ்வர்யா ஒப்பந்தமாகியுள்ளார்.





## திருமணம் எப்போ?

ரன்பீர் கபூரை தீவிரமாக காதலித்து வருகிறார் அலியா பட். இந்நிலையில் ரன்பீரின் அப்பா ரிஷி கபூரின் உடல் நிலை பாதிக்கப்பட்டு அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வருகிறார். இதனால் அப்பாவின் விருப்பத்துக்காக அலியா பட்டை விரைவிலே ரன்பீர் கபூர் திருமணம் செய்துகொள்வார் என தகவல்கள் வெளியானது. இது குறித்து ரன்பீர் கபூர் எதுவும் பேசாமல் இருந்தார். சமீபத்தில் தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அலியாவிடம் திருமண செய்தி தொடர்பாக கேட்கப்பட்டது. அப்போது அவர், 'நாங்கள் இருவரும் காதலிப்பதை மறைக்கவில்லை. திருமணம் செய்யப் போவதை மட்டும் எப்படி மறைப்போம்? இப்போதைக்கு நடித்து கொடுக்க வேண்டிய படங்கள் இருவருக்குமே இருக்கிறது. திருமணம் பற்றிபிறகு யோசிப்போம்' என்றார்.



## தாமதம் ஏன்?

கழுகு படத்தை இயக்கிய சத்யசிவா, கழுகு 2 படத்தை இயக்கி வருகிறார். முன்னதாக அவர் ஆரம்பித்த படம் 1945. தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் உருவாகும் இந்த படத்தில் ராணா நாயகனாக நடிக்கிறார். நாயகி ரெஜினா.

சத்யராஜ், நாசர், ஆர்.ஜே.பாலாஜி உட்பட பலர் நடிக்கும் இப்படத்திற்கு தமிழில் 'மடை திறந்து" எனப் பெயரிட்டுள்ளனர். 2016 இல் இந்த படம் தொடங்கியது.

இடையில் சில காரணங்களால் தாமதமானதாகக் கூறும் இயக்குநர், படத்தின் கதை நேதாஜியின் படையில் இருந்த ஒருவரைப் பற்றியது என்றும் விரைவில் படம் வெளியாகும் எனக் கூறியுள்ளார்.

## அஜித்தின் ஆசை

அஜித்துடன் நடிக்க வேண்டும் எனப் பல நடிகர், நடிகையர்கள் ஆசைப்படுகின்றனர். ஆனால், அஜித்தோ மோகன்லால், பிரபாஸுடன் நடிக்க ஆசைப்படுகிறேன் எனக் கூறியிருக்கிறார்.

தல 59 படம் ஹைதராபாத்தில் ராமோஜிராவ் ஸ்ரூடியோவில் இடம்பெற்று வருகிறது. இந்தியாவின் மிகப்பெரிய ஸ்ரூடியோக்களில் ஒன்றான அங்கு பல படங்களுக்கு ஒரே நேரத்தில் படப்பிடிப்பு இடம்பெறுகிறது.

இந்த ஸ்ரூடியோவில்தான் மோகன்லால், பிரபாஸ் ஆகியோரின் படப்பிடிப்பும் நடக்கிறது. இந்தப் படப்பிடிப்புகளை நேரில் சென்று பார்த்த அஜித் மோகன்லால், பிரபாஸை சந்தித்துப் பேசினார். இதன் போதே அவர் தனது ஆசையையும் வெளியிட்டார்.






## உடல் எடை கூட்டும் நடிகை

தொலைக்காட்சி தொடர்களில் நடித்து பிரபலம் ஆனவர் மவுனி ராய். இப்போது 3 படங்களில் நடிக்கிறார். இதில் ராஜ்குமார் ராவுடன் மேட் இன் சைனா படங்களில் நடிக்கிறார்.

மேட் இன் சைனா படம் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் கொண்ட கதையாக உருவாகிறது. இதில் குஜராத்தி பெண் வேடத்தில் மவுனிராய் நடிக்கிறார். இதற்காக உடல் எடையை அதிகரிக்க வேண்டும் என இயக்குனர் சொல்லியிருக்கிறார்.

இதைக் கேட்டு மவுனிராய், அதிர்ச்சி அடைந்த அவர், எடையை கூட்டினால் மீண்டும் மெலிய சிரமப்பட வேண்டும். இதனால் நடிக்க விருப்பமில்லை என்று தெரிவித்தார். ஆனால் எடையை சற்றுக் கூட்டினால் போதும் என இயக்குனர் அவருக்கு சலுகை அறிவிக்கவே சம்மதித்து விட்டாராம்.

பண்ணைகளில் வேலை செய்ய இயலாத சிறு வர்களுக்கு காலணிகள், காலுறைகள், மேற்சட்டை, காற்சட்டை எதுவும் கிடையாது. வருடத்துக்கு இரண்டு முரட்டுச் சட்டைகள் மட்டும்தான் அவர்களின் உடை. அவை கிழிந்து போனாலோ அளவு போதாமல் போய்விட்டாலோ அடுத்த வருடத்துக்கான தவணை வரும் வரையிலும் அவர்கள் நிர்வாணமாகத் திரிய வேண்டியதுதான். வருடத்தின் எல்லாப் பருவங்களிலும் ஏழு வயது முதல் பத்து வயது வரையிலுமான சிறுவர், சிறுமிகள் பண்ணை வெளிகளில் நிர்வாணமாகத் திரிந்து கொண்டிருப்பார்கள்.

தொடர் 06

# ஓர் அடிமையின் விடுதலைப் போர்

பிரெட்ரிக் டக்ளஸ்

எனது எஜமானனின் குடும்பத்தில் அன்ட்ரூ, ரிச்சர்ட் என்று இரண்டு மகன்களும், லுக்ரேசியா என்ற மகளும் , அவளது கணவன் கப்டன் தோமஸ் ஆல்ட் என்பவனும் இருந்தனர். கேணல் எட்வேர்ட் லொய்ட் என்பவரின் பண்ணை வீடொன்றில் வசித்தனர். என் எஜமானன்தான் லொய்ட்டின் உதவியாளன், கண்காணிகளுக்கு மேற்பார்வையாளன்.

என் குழந்தைப் பருவத்தின் இரண்டு ஆண்டுகளை இந்தப் பண்ணையில் எஜமானனின் குடும்பத்தோடு கழித்தேன். முன்னர் நான் விவரித்த அந்தக் கொடுமையான காட்சியை நான் கண்டது அங்கேதான். அடிமைத்தளையின் முதல் அடையாளங்களை இப்பண்ணையில்தான் கண்டேன் என்பதால் இப்பண்ணையைப் பற்றியும் இதிலிருந்த அடக்குமுறை பற்றியும் கொஞ்சம் சொல்கிறேன்.

டால்போட் மாகாணத்தில் ஈஸ்டனுக்கு வடக்கே இருபது மைல் தொலைவில் மைல்ஸ் நதிக்கரையில் உள்ளது இந்தப் பண்ணை. புகையிலை, சோளம், கோதுமை இப்பண்ணையின் முக்கியமான பயிர்கள். இவை ஏராளமாகப் பயிர் செய்யப்படுகின்றன. இங்கிருந்தும், எஜமானனுக்குச் சொந்தமான மற்றப் பண்ணைகளிலிருந்தும் விளைகிற பொருட்களை பால்டிமோரில் உள்ள சந்தைக்குக் கொண்டு செல்வதற்கு சிறிய கப்பலொன்றைத் தொடர்ந்து விடவேண்டியிருந்தது.

கேணலின் மகள் ஒருத்தியைக் கௌரவப்படுத்தும் விதத்தில் இக்கப்பலுக்கு சாலி லொயிட் என்று பெயரிடப்பட்டிருந்தது. எஜமானனின் மருமகன் கப்டன் ஆல்ட்தான் கப்பலுக்குத் தலைவன். கேணலுக்குச் சொந்தமான அடிமைகளையே கப்பல் பணிகளுக்கும் நியமித்திருந்தனர். பீறறர், ஐசக், ரிக் ஜேக் ஆகியோர்தான் இவர்கள். பிற அடிமைகளால் பெரிதும் மதிக்கப்பட்ட அவர்கள் அனைவரும் பண்ணையில் தனித்த செல்வாக்கு உடையவர்களாகக் கருதப்பட்டார்கள். அடிமைகளைப் பொறுத்தவரை பால்டிமோர் நகரத்தைக் காண அனுமதிக்கப்படுவது என்பது சாதாரண விடயம் அல்ல.

கேணல் லொய்ட் தன் வீட்டுப் பண்ணையில் முன்னூறு முதல் நானூறு அடிமைகள் வரை வைத்திருந்தான். அவனுக்குச் சொந்தமான அருகிலிருந்த பிற பண்ணைகளில் இன்னும் நிறைய அடிமைகள். வீட்டுப் பண்ணைக்கு வெகு அருகில் இருந்த இரண்டு பண்ணைகள் வைடவுன், நியூடிசைன் ஆகியவை. நோ வில்லிஸ் என்பவனின் மேற்பார்வையில் இருந்த வைடவுன். நியூடிசைன் பண்ணையோ, டவுன்ஸ்எண்ட் என்பவனின் பொறுப்பிலிருந்தது. இவர்களும், இருபதுக்கும் அதிகமான பிற பண்ணைகளின் மேற்பார்வையாளர்களும் வீட்டுப் பண்ணையின் மேலாளர்களிடமிருந்தே ஆலோசனைகளையும் விதிமுறைகளையும் கேட்டறிந்தனர். இந்த வீட்டுப் பண்ணை ஒரு பெரிய வியாபார மையம்.

இருபதுக்கும் அதிகமான பண்ணைகள் யாவற்றுக்கும் இதுவே தலைமையகம். மேலதிகாரிகளுக்கு இடையிலான அனைத்துப் பிரச்சினைகளுமே இங்கேதான் தீர்க்கப்பட்டன. அடிமைகளில் எவரும் பெரிய குற்றம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டாலோ, சமாளிக்க முடியாதவராய்க் கருதப்பட்டாலோ அல்லது ஓடிப் போக முடிவு செய்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டாலோ அவர்கள் உடனடியாக இங்கு கொண்டு வரப்படுவார்கள். பயங்கரமான கசையடிகளுக்குப் பிறகு, பிற அடிமைகளை எச்சரிக்கும் விதமாகக் கப்பலில் ஏற்றி பால்டிமோருக்குக் கொண்டு செல்லப்பட்டு அஸ்ரின் வில்போக்கிடமோ அல்லது வேறு அடிமை வியாபாரிகளிடமோ விற்கப்பட்டு விடுவார்கள்.

மற்றப் பண்ணைகளைச் சேர்ந்த அடிமைகளும்கூட இங்குதான் தங்களது மாதாந்த உணவுப் படியையும் வருடாந்த உடையையும் பெற்றுக் கொள்வார்கள். ஆண்களும் பெண்களும் எட்டு இறாத்தல் பன்றி இறைச்சியையும் அல்லது அதற்கு ஈடான மீனையும் எட்டு கலன் சோள மாவையும் மாதாந்த உணவுப்படியாகப் பெற்றனர். இரண்டு முரட்டு சணல் சட்டைகள், ஒரு சணல் காற்சட்டை, ஒரு மேலாடை, குளிர் காலத்திற்காக முரட்டு நீக்ரோ துணியாலான இரண்டு காற்சட்டைகள், ஒரு ஜோடி காலுறைகள், ஒரு ஜோடி காலணிகள் ஆகியவையே ஓர் ஆண்டுக்கான உடைகள்.


அடிமைச் சிறுவர்களுக்கான உணவுப்படி அவர்களின் அம்மாக்களிடமோ அல்லது அவர்களை வளர்க்கும் கிழவிகளிடமோ வழங்கப்படும். பண்ணைகளில் வேலை செய்ய இயலாத சிறுவர்களுக்கு காலணிகள், காலுறைகள், மேற்சட்டை, காற்சட்டை எதுவும் கிடையாது. வருடத்துக்கு இரண்டு முரட்டுச் சட்டைகள் மட்டும்தான் அவர்களின் உடை. அவை கிழிந்து போனாலோ அளவு போதாமல் போய்விட்டாலோ அடுத்த வருடத்துக்கான தவணை வரும் வரையிலும் அவர்கள் நிர்வாணமாகத் திரிய வேண்டியதுதான். வருடத்தின் எல்லாப் பருவங்களிலும் ஏழு வயது முதல் பத்து வயது வரையிலுமான சிறுவர், சிறுமிகள் பண்ணை வெளிகளில் நிர்வாணமாகத் திரிந்து கொண்டிருப்பார்கள்.

ஒரேயொரு முரட்டுப் போர்வை. அதைப் படுக்கையெனக் கருத முடியாது. உண்மையில் அடிமைகளுக்குப் படுக்கைகள் கிடையாது. இது ஒரு பெரிய சலுகை என்றும் கருதப்படுவதில்லை. படுத்துக் கொள்வதற்கு படுக்கை இல்லையே என்ற குறை, தூங்குவதற்கு நேரம் இல்லையே என்கிற குறையை விடப் பெரிதாக இல்லை. பகல் முழுவதும் பண்ணையில் வேலை பார்த்து முடித்த பின், பெரும்பாலானவர்களுக்குத் துவைப்பது, கருவிகளைப் பழுது பார்ப்பது, சமைப்பது என்று வேலைகள் சரியாக இருக்கும். இந்த வேலைகளைச் செய்வதற்கு அடிப்படை வசதிகளும்கூடக் கிடையாது. பல பேருடைய தூங்கும் நேரத்தையும் அடுத்தநாள் பண்ணை வேலைகளுக்கான தாரிப்புகளே ஆக்கிரமித்துக் கொள்ளும். (போர் நீளும்)



# ஆட்டோசங்கரின் கதை

## இந்தியாவை உலுக்கிய ஒரு சீரியல் கில்லரின் வாக்குமூலம் 21



# என் கடைக்கு எதிர்க்கடை போட்ட பெண்

'இப்ப ரவி எங்கே?"

'எனக்கு கடுப்பாப் போயிடுச்சு! கத்தியாலே சதக் சதக்னு ரெண்டு குத்து! ஆள் அவுட்"

குடல் உடம்புக்கு வெளியே சரிந்துகிடக்க பரிதாபமாய் செத்துப் போயிருந்தான் ரவி. பிணத்தை எரிக்கலாம் என்றால் மறுநாள் பாரத் பந்த் (இலங்கைத் தமிழருக்காக). வழி எங்கும் பொலிஸ் மயம்! காரை மடக்கி செக் செய்வார்களே என்று பயம். விபசாரப் பெண்கள் தங்கி இருந்த வீட்டின் பின்புற பாத்ரூம் ஓரத்தில் ஆழக் குழிதோண்டி அம்மணமாகப் புதைத்தார்கள். நடமாட முடியாத நிலைமையில் இருந்ததால் சங்கர் மேற்பார்வை மட்டும்!

பின்னால் பொலிஸ் புகாரில் ரவியின் கழுத்தை மோகன் இறுக்கினதாகவும், பாபு ரவியின் நெஞ்சில் ஏறி அமர, ரவியின் வயிற்றில் எனது வலது காலால் எட்டி உதைத்தேன் என்றும் ஜோடிக்கப்பட்டது.

வலதுகால் உடைந்து பேண்டேஜ் சுற்றிக் கொண்டிருந்தவர் நடமாடுவதே ஏதோ, அடுத்தவர் ஒத்தாசையில்! எட்டி உதைப்பது எங்ஙனம் சாத்தியம்? துடித்துப்போன நான் அந்த சமயத்தில் சிகிச்சை பெற்றதை நீதிமன்றில் சொல்ல வரும்படி டாக்டரிடம் கெஞ்சினேன். ஆனால் டாக்டர் சந்திரன் வரமறுத்தார். பயப்படாதே! பயப்படாதே! என்று திரும்பத் திரும்ப தன் நோயாளிக்கு சொல்லிவிட்டு அவர் பயந்து நடுங்கினார்.

நான் பங்கு பெறாத அந்தக் கொலையும் என்னைக் கொல்வதில் பங்குபெறப் போகிறது!

அப்போது எனக்குசட சகட யோகம்! பின்னால் சங்கடம் மட்டுமே யோகமாக வரப்போகிறது என்று கண்டேனா? ஆடித் தீர்த்தேன்! பக்கபலமாகப் பெண் எம்.எல்.ஏ. ரத்தத்தின் ரத்தமாக இருந்தது பேரதிர்ஷ்டமாகப் போயிற்று. சாராயம், தோராயமாக திருவான்மியூரை நாறடித்தது என்றால், மிச்சம் மீதி இருந்த பரி சுத்தத்தை விபசாரம் வேரோடு களைந்து எடுத்தது. இந்த ரெண்டு வழிகளில் ஏரியா எக்கச்சக்கமாகக் கெட்டு போதாதென்று மேலும் கொஞ் சம் கெடுப்பதற்காகவே முளைத்ததோ அந்த வீடியோ 'கேம்ஸ்' கடை!?

அந்த (சாக்)கடை நான் துவங்கினது அல்ல. ஒரு பெண்மணி! கௌரவமான பெண்மணி. அவரை ஜனங்களுக்கு அதிகமாகத் தெரியாது. அவர் கணவரை? மிஸ்டர் மில்க் அவர்! பொலி ஸில் ரொம்ப மற்றும் ரொம்ப உயர்ந்த அந்தஸ்தில் இருந்தார். இப்போதும்தான்! கணவரது பேச்சுக்கு எதிராய் ஒரு வீடியோ கேம்ஸ் கடையை அந்த அம்மையாரே நடத்தினார்!

திருவான்மியூரில் வயசுக்கு வந்த ஆடவர்களில் அநேகம் பேர், ஒன்று அந்த வீடியோ கேம் ஸில் இருந்தனர். அல்லது எனது வீ.டி. கேம்ஸில்! பூட்சுக்குள் சிக்கின மண் துகள் மாதிரி என்னை அந்த வீடியோ கடை உறுத்திக் கொண்டே இருந்தது. கடைகூட அல்ல. அந்த முதலாளி பெண்மணியும்தான்.

எப்படியாவது அந்த அம்மையாரின் நட்பு கிடைத்தால் தேவலையே என எல்லா எண்ணங்களிலும் விரும்பினேன். என்னதான் சாராயத்திலும், விபசாரத்திலும் இலாபம் எக்குத்தப்பாகவும், தப்புப் தப்பாகவும் குவிந்து கொண்டிருந்தது என்றாலும், வெளியே யாராவது கேட்டால் கௌரவமாக சொல்லிக் கொள்ள முடியாத தொழிலாக இருக்கிறதே என்ற சங்கடம் எப்போதும் உண்டு. எப் படியாவது செல்வாக்கு பெற்று ஒரு எம். எல்.ஏ. ஆகிவிட வேண்டும் என்று மனசு துடித்தது. என்றைக்காவது ஒரு நாள், சட்டமன்றத்துக்குள் நுழைந்தே தீருவேன் என்று மற்றவர்களிடம் அடிக்கடி மந்திரம் ஜெபித்தேன்!

தேர்தலுக்குள் நுழையும் முன் அரசியல் மட்டத்திலும் அதிகார மட்டத்திலும் சகலரின் சிநேகமும் சம்பாதிக்க வேண்டும் என்பது குறிக்கோளாக இருந்தது.

அந்த நட்புக்காக உ.பொ.ஆ. அர்ப்பணிக்கவும் தயாராக இருந்தேன். நீக்கப்பட்ட தெலுங்கு தேச கட்சியின் பெண் எம்.பி. ஒருவரது பெயரை, தன் பெயரின் முன்பகுதியாகக் கொண்டவர் அந்த அம்மையார்.

பெயரின் பின் பாதியில் தேவி உண்டு! அதென்னவோ எனக்கும் தேவி என்ற பெயருக்கும் அவ்வளவு ராசி. அப்புறமாய் அதைப் பார்ப்போம். முதலில் அந்த அம்மையார்! படகு சைஸ் காரில் அவர்கள் இறங்கி வருகிற தோரணையும், பொலிஸ்காரர்கள் காண்பிக்கிற பயபக்தியையும் பார்த்துப் பார்த்து ஆவல் பொங்கிற்று எனக்கு.

அந்த அம்மையாரின் சிநேகம் பெற வேண்டுமே, எப்படி? இந்த "எப்படி" என்ற வார்த்தை மாம்பழத்து வண்டாக மனசைக் குடைந்தது. தம்பி மோகன் சொன்னான் 'அண்ணா...! நமக்குதான் அந்த பெண் எம்.எல்.ஏ. செல்வாக்கு இருக்குதே...! போட்டிக்கு நாமும் ஒரு கடை போடுவோம்... இவங்க கடையை ஆளுங்களை வச்சு அடிச்சு நொறுக்குவோம்!"

'சேச்சே..."

'எனக்குத் தேவை அவங்களோட கடை இல்லை... அவங்கதான்!"

அப்புறம் ஒரு நாள், பதற்றத்துடன் ஓடிவந்தான் மோகன்...! ஓடிவந்ததில் மூச்சு வாங்கியது. கண், காது, மூக்கு என எல்லாவற்றிலும் காற்றை வெளியே விடுவான் போலிருந்தது.

'அண்ணே... விடயம் தெரியுமா? அந்த வீடியோ கடையிலே யாரோ நாலைஞ்சு பேர் புகுந்து அடிச்சு நொறுக்கறாங்களாம்!"

சட்டென சுறுசுறுப்பு என்னுள் சவாரி செய்தது.

'சீக்கிரம் வண்டியை எடு"

(தொடரும்)

# நீலத்தில் இருந்து பச்சைக்கு மாறி வரும் கடல்!



நீலநிறமாக இருக்கும் கடல் இன்னும் 80 ஆண்டுகளில் பச்சை நிறமாக மாறிவிடும் என்று ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

துருவப் பகுதிகளில் இப்போதே கடல்கள் பச்சை நிறமாக மாறிவருகின்றன எனக் கூறியிருக்கிறார்கள். புவி மத்திய கோட்டுக்கு அருகில் உள்ள பகுதிகளில் மட்டுமே தற்போது அடர்த்தியான நீலத்தில் கடல் காட்சியளிக்கிறது. ஆனால், இந்தப் பெருங்கடல்களின் நீல நிறம் 2100 ஆம் ஆண்டுக்கு முன்பாக மாறிவிடும் என்று எச்சரித்திருக்கிறது அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் தொழில்நுட்பப் பல்கலைக்கழக ஆய்வு முடிவு.

கடலில் காணப்படும் பைடோ பிளாந்தன்- அல்கே போன்ற மிதவைத் தாவர நுண்ணுயிர்கள் காரணமாக கடலில் பச்சை நிறம் ஏற்படுகிறது. இந்தத் தாவரங்களைத்தான் கடலில் வாழும் மீன்கள் உணவாக உட்கொள்கின்றன. இவை குளோரோபில் என்ற பச்சையத்தைப் பயன்படுத்தி சூரிய ஒளியை ஆற்றலாக மாற்றுகின்றன. காற்றிலிருக்கும் நைதரசனை கிரகித்து நிலைப்படுத்துகின்றன. பைடோ பிளாந்தன்கள் நீலத்தைக் கிரகித்து தங்களுடைய பச்சை வண்ணத்தை ஒளிரச் செய்யும் இடங்களில் எல்லாம் கடல் பசுமையாகக் காட்சி தருகிறது.

ஃபைடோ பிளாந்தன்கள் அடர் பச்சையால் அங்கே காபநீர் ஒட்சைட் வாயுவும் வெப்பமும் அதிகமாக இருக்கிறது என்று அர்த்தம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். பருவநிலை மாறுதல்கள் மட்டுமின்றி எல்நினோ கடலடி நீரோட்டங்களும் இந்த நிற மாற்றத்துக்குக் காரணமாக இருக்கின்றன. இந்த நிலை தொடர்ந்து நீடித்தால், நீல நிறக் கடல் பச்சை வண்ணக் கடலாக மாறிவிடும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

# பூச்சிகளும் நம் நண்பர்களே...!



பூச்சிகளின் உலகம் மிகப் பிரமாண்டமானது. அதன் இனப்பெருக்க வீதம், மனிதனை விடப் பல மடங்கு அதிகமானது. அதனால்தான், பூச்சிகளின் எண்ணிக்கை, உலகில் அதிகளவில் இருக்கிறது. பொதுவாகப் பூச்சிகள், முட்டை, புழு, கூட்டுப்புழு, தாய்ப்பூச்சி என நான்கு படிநிலைகளைக் கொண்டவை. பூச்சிகளின் இளம்பருவமான புழுப்பருவத்தில் ஒவ்வொரு புழுவும் தன் உடல் எடையைப்போல 50 மடங்கு அளவு உணவை உண்டு 48 மடங்கு அளவு கழிவை வெளியேற்றுகின்றன.

பயிரில் இழப்பை உண்டாக்குகின்றன, மனிதர்கள் உள்பட உயிரினங்களுக்கு நோயைப் பரப்புகின்றன என்பதுதான் பூச்சிகளைப் பற்றிப் பொதுவாக நாம் அறிந்து வைத்திருக்கும் விடயங்கள். ஆனால், மனிதர்கள் மற்றும் பிற உயிரினங்களின் புறச்சூழலையும் உணவு வளையத்தையும் நிர்வகிப்பதில் பெரும்பங்காற்றுபவை பூச்சிகள்தான். உலகில் அழிந்துபோன உயிரினங்களின் பட்டியலில் ஒரு பூச்சி இனம்கூட இடம் பெறவில்லை என்பது ஆச்சரியமான உண்மை. அவை அழியாததற்குக் காரணம் அவற்றின் உருவ அமைப்புதான்.

ஒரு கணக்குக்கு உலகில் யானை மிதித்து 2,000 பேரும், பாம்பு கடித்து 10,000 பேரும் இறக்கிறார்கள் என வைத்துக்கொள்வோம். இந்த விகிதத்தோடு ஒப்பிட்டால் நுளம்புகளால் கடிபட்டு நோய்த்தொற்றுகளுக்குள்ளாகி இறப்பவர்கள் 1,00,000 பேருக்கும் அதிகம். இப்போது முடிவு செய்து கொள்ளுங்கள் உலகில் பலசாலியான உயிரினம் எது என்பதை. இப்படிப்பட்ட பராக்கிரமங்களைக் கொண்டிருப்பதால்தான் பூச்சிகளைப் பற்றிய புரிதல் மனிதர்களுக்கு

**புதிய தொடர் – 01**

**வயலில் ஏதாவது பூச்சியைப் பார்த்ததும் உடனடியாகப் பூச்சி கொல்லி வாங்க ஓடுபவரா நீங்கள்... அப்படியிருந்தால், உங்களுக்காகத்தான் இத்தொடர்!**

அவசியம் என்பதாக உள்ளது. குறிப்பாக விவசாயிகளுக்கு மிக மிக அவசியம்.

பூச்சிகளில் நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள், மண்ணில் உள்ள பொருள்களை மட்க வைக்கும் பூச்சிகள் என மூன்று வகைகள் உள்ளன. உலகில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் பூச்சி கொல்லி நுளம்புக்கு எதிராக உருவாக்கப்பட்டதுதான். 1939–ஆம் ஆண்டு, ஜேர்மனியைச் சேர்ந்த போல் முல்லர் என்பவர் நுளம்புகளைக் கொல்வதற்காக, 'டி.டி.ரி' (DDT) எனும் பூச்சி கொல்லியை உருவாக்கினார்.

அது நுளம்புகளை அழிப்பதைக் கண்டறிந்த பிறகு, முல்லர் சொன்ன வாசகம் 'இனி உலகத்தில் நுளம்புகளே இருக்காது' என்பதுதான். ஆனால், இன்றுவரை அந்த வாசகத்தைக் காப்பாற்ற போராடிக் கொண்டிருக்கிறார்கள், விஞ்ஞானிகள். ஆனால் முடியவில்லை. கொசுக்களை அழிக்க, தென் கிழக்கு ஆசிய நாடுகள் செலவழிக்கும் தொகை, அமெரிக்கா இராணுவத்துக்குச் செலவழிக்கும் தொகைக்கு ஈடானது என்பது பெரும்பாலானோருக்குத் தெரியாது.

உணவுகளைச் சிதைக்கும் பூச்சிகளில் கரப்பான் பூச்சிக்கு முக்கியபங்கு உண்டு. மனிதன் சாப்பிட்டு மீதமான உணவுகளை, தன் உணவாக எடுத்துக்கொண்டு அதை அப்புறப்படுத்தும் பூச்சி உண்மையில் சிறந்ததுதானே. 'கரப்பான் பூச்சி இருந்தா வீட்டில செல்வம் சேரும்' என இன்றும் கிராமங்களில் சொல்வதைக் கேட்கலாம். அவை, நமது உணவின் மீதத்தை அகற்றுகின்றன. இதுபோன்ற புரிதல்கள் இல்லாததால், மனிதனுக்கும், பூச்சிகளுக்கும் இடையில் நடக்கும் போரில் பூச்சிகள் அதிகமாக அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

2050 ஆம் ஆண்டில் மனிதனின் உணவுத் தேவைக்கு ஏற்ப, உணவு உற்பத்தி இருக்குமா என்ற கேள்வி நம்முன் நிற்கிறது. அப்படி ஒரு தட்டுப்பாடு ஏற்பட்டால், நமக்கு உணவாகக் கைகொடுக்கக் காத்திருப்பவை, பூச்சிகள்தான். ஒரு கிலோ மாட்டிறைச்சியில் இருக்கும் புரதம் , ஒரு பூச்சியில் இருக்கிறது. நமது எதிர்கால உணவே பூச்சிகளாக இருக்கக்கூடும். இதுவரை உலகில் கண்டறியப்பட்டு வகைப்படுத்தப்பட்ட உயிரின வகைப்பாடு பட்டியலில் 57 வீதம் பூச்சிகள்தான். மீதி 43 வீதம்தான் மனிதர்கள், ஆடு, மாடு, கோழி எல்லாமே. இதுவரை கிட்டத்தட்ட 10 இலட்சம் பூச்சி இனங்கள்தான் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

**தேனீக்கள், எறும்புகள், கறையான்கள் போன்ற பூச்சி இனங்கள் கூட்டுக் குடும்பமாக வாழும் தன்மை கொண்டவை. ஒவ்வொரு பூச்சியையும் பார்த்துத்தான் அடுக்கு மாடி வீடுகள், விமானம் மற்றும் குளிரூட்டப்பட்ட அறைகள் போன்ற புதிய தொழில்நுட்ப கருவிகள் உருவாக்கப்பட்டன. பூச்சிகளைப் பார்த்துக் கண்டறிய வேண்டிய விடயங்கள் அதிகமாக இருக்கின்றன.**

பூச்சிகளின் வகைகளில் இது வெறும் பத்து வீதம் மட்டுமே. இன்னும் 90 வீதமான பூச்சிகள் வகைப்படுத்தப்படவில்லை. இதுவரை, 4,00,000 வண்டு வகைகள், 1,70,000 வண்ணத்துப்பூச்சி மற்றும் அந்துப் பூச்சி வகைகள், 1,20,000 ஈ வகைகள், 82,000 கதிர் நாவாய் பூச்சி வகைகள், 1,10,000 எறும்புகள் மற்றும் தேனீ வகைகள், 5,000 தட்டான் பூச்சி வகைகள், 2,000 கும்பிடு பூச்சி வகைகள், 20,000 வெட்டுக்கிளி வகைகள், 1,50,000 குளவி வகைகள் எனக் கண்டறியப்பட்டுள்ளன. இப்போது யோசித்துப் பாருங்கள்... நாம் பூச்சிகளின் உலகத்தில் வசிக்கிறோமா... இல்லை பூச்சிகள் நம் உலகில் வசிக்கின்றனவா என்று!

இந்தப் பூச்சிகள்தான் மனிதனின் வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மனிதன் உண்ணும் உணவுகள், பூச்சிகளால்தான் உருவாக்கப்படுகின்றன. மனிதனைப் போலவே பூச்சிகளுக்கும் நரம்பு மண்டலம், செரிமான மண்டலம், சுவாச மண்டலம் ஆகியவை உள்ளன. மனிதனால் மூக்கு, வாய் ஆகியவற்றைப் பயன்படுத்தி மட்டுமே சுவை உணர்வைக் கண்டறிய முடியும். பூச்சிகளுக்கு அதைவிட மேலான கண்டறியும் திறன் உண்டு. ஒலி, ஒளி இரண்டையும் கண்டுபிடித்துப் பயன்படுத்துபவை பூச்சிகள்தான்.

காட்டில் இருக்கும் சில்வண்டு, இறக்கை மூலமாகத் தன் இணையைத் தேடுவதற்குக் கொடுக்கும் ஒலி 2 கிலோ மீற்றர் தூரத்துக்குக் கேட்கும். மின்மினிப் பூச்சிகள் இணை மற்றும் இரைதேட வெளிச்சத்தை (ஒளியை) வெளியிட்டுப் பறக்கின்றன.

தேனீக்கள், எறும்புகள், கறையான்கள் போன்ற பூச்சி இனங்கள் கூட்டுக் குடும்பமாக வாழும் தன்மை கொண்டவை. ஒவ்வொரு பூச்சியையும் பார்த்துத்தான் அடுக்கு மாடி வீடுகள், விமானம் மற்றும் குளிரூட்டப்பட்ட அறைகள் போன்ற புதிய தொழில்நுட்பக் கருவிகள் உருவாக்கப்பட்டன. பூச்சிகளைப் பார்த்துக் கண்டறிய வேண்டிய விடயங்கள் அதிகமாக இருக்கின்றன.

ஒரு முட்டையிலிருந்து ஓர் உயிரினம் வருவதைத்தான் பார்த்திருக்கிறோம். ஒட்டுண்ணி குளவிகள், ஒரு முட்டையிலிருந்து 100 குளவிகளை உருவாக்கும் திறன் வாய்ந்தவை. ராணித் தேனீ, ஒருமுறை உடலுறவு வைத்துக் கொண்டால், ஓர் ஆண்டில் இரண்டு லட்சம் முட்டைகளை இடும் வல்லமையைப் பெற்றது.

இக்காலகட்டத்தில் அதிகமான பூச்சி கொல்லிகளைத் தெளித்துத் தீமை செய்யும் பூச்சிகளோடு நன்மை செய்யும் பூச்சிகளையும், மண்ணை வளமாக்கும் பூச்சிகளையும் அழித்து வருகிறோம். மண்ணைப் பொன்னாக்கி விவசாயிகளை வளமாக்கும் பூச்சிகளைப் பற்றி இத்தொடரில் தொடர்ந்து பார்க்கலாம்... வாருங்கள் சேர்ந்து பயணிப்போம்.


(அறிவோம்)

-ஏ.ஜே.ஞானேந்திரன்-

# மீண்டும் மீண்டும் அழிக்கப்பட்ட ஜெருசலேம்

ஜெருசலேம் யாத்திரை...!

பயண அனுபவம் - 6



அகழ்வில் எடுக்கப்பட்ட கட்டடம்

**ஓயாத போர்கள்**

பழைய இஸ்ரேல் நகரை, 1967 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆறு நாள் யுத்தத்தில் இஸ்ரேல் அரசு கைப்பற்றி தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்வரை, இந்த மோதல்கள் ஓயாது இடம்பெற்றன. இன்று நாம் காணும் சுவர், சுமாராக 50 மீற்றர் நீளமும், 20 மீற்றர் உயரமும் கொண்டது. இறைவனின் பிரசன்னம் என்றுமே இந்தச் சுவர்களை விட்டுப் போவதில்லை என்று நம்பும் யூதர்கள், இந்தச் சுவரை பூமிக்கு அடியில் மிக ஆழமாகப் புதையுண்டு இருக்கும் வண்ணம் எழுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

சுவரில் தலையைச் சாய்த்து மிகவும் பக்தியோடு, மனம் நொந்து, இவர்கள் ஜெபிப்பதைக் கண்ட ஐரோப்பியர்கள்தான் இந்தச் சுவரை அழும் சுவர் (Wailing Wall) என்று அழைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு சிறு துண்டில் தமது பிரார்த்தனையை எழுதி, சுவர் வெடிப்புகளில் செருகி விடும் பழக்கமும் இந்தப் பிரார்த்தனையாளர்களிடம் இருப்பதைக் கவனிக்க முடிந்தது. இஸ்ரவேலர்கள் என்று அறியப்படுபவர்கள் ஏப்ரஹாம் என்ற தீர்க்கதரிசியின் மூன்றாவது தலைமுறையின் சந்ததிகள் என்று சொல்கிறார்கள்.

ஏப்ரஹாம் என்ற தீர்க்கதரிசிக்கு இரு குழந்தைகள் இருந்தனர். அவர்கள் இஸ்மாயில், ஐசக் என்போராவர். ஐசக்கிற்கு இரு குழந்தைகள் இருந்தனர். அவர்கள் ஏசா, யாகோப் என்பவர்களாவர்.



கொல்லப்பட்ட கோலியாத்தின் தலையுடன் தாவீது

யாகோபிற்கு பன்னிரண்டு குழந்தைகள். அவர்களில் இருந்தே யூத இனம் தோற்றம் பெற்றது என்கிறது சரித்திரம். ஒரு சந்தர்ப்பத்தில் கடவுள் யாக்கோபின் பெயரை இஸ்ரவேலாக மாற்றியதாக யூதர்களின் புனித நூலான தோரா வேதம் குறிப்பிடுகிறது. இதன் காரணமாகவே யூதர்கள் இஸ்ரவேலர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

ஜெருசலேம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் பற்றி அறியவரும் போது, மதத்தின் பெயரால் மதம் பிடித்த மனிதன் மிருகத்தனமாகவே நடந்து கொள்கிறான் என்பது துல்லியமாகத் தெரிகின்றது. மதம் நமக்கு பிடித்துக் கொண்டு அதைப் பின்பற்றுவது ஒன்றென்றால், மதம் பிடித்து, தன் மதமே ஒரேயொரு மதமென்ற வெறியில் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்வது இன்னொன்று. இரண்டு முறை ஜெருசலேம் அழித்து தரைமட்டம் ஆக்கப்பட்டுள்ளது. 23 தடவைகள் முற்றுகையிட்டு ள்ளார்கள். 52 தடவைகள் தாக்கியிருக்கிறார்கள். 44 தடவைகள் நகர் கைப்பற்றப்பட்டி ருக்கின்றது.

கி.மு. 4 ஆயிரம் ஆண்டிலிருந்தே மக்கள் குடியேற்றம் கண்ட ஒரு நகரை மதம் என்ற பெயரால், எப்படி எப்படியெல்லாம் பந்தாடி இருக்கிறார்கள் என்று இந்த வரலாற்றைக் கொண்டு அறிய முடிகின்றது. இந்த நில ஆக்கிரமிப்புதானே இன்று சிரியாவை வெறியர்களாக்கி இருக்கிறது? எத்தனை ஆயிரம் அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன.

**பழைய ஜெருசலேமும் தாவீதின் நகரமும்**

"ஒரு காலத்தில், ஜெருசலேம் நகரம் பரந்து விரிந்த பாரசீக சாம்ராஜ்யத்தின் கீழ் இருந்தது. கி.மு. 607 இல் ஜெருசலேம் அழிக்கப்பட்டது. அவர் வளர்ந்த ஊரான நாசரேத்திலும் சரி, அவர் அதிகமாய் ஊழியம் செய்த நகரமான கப்பர்நகூமிலும் சரி, விறுவிறுப்பான மூன்றரை வருட ஊழியக் காலத்தில் அவர் சுற்றிய பட்டணங்களிலும் கிராமங்களிலும் சரி, கடவுளுடைய ராஜ்யத்தைப் பற்றி பிரசங்கிப்பதற்கும் கற்பிப்பதற்கும் இயேசு அடிக்கடி ஜெபக்கூடத்திற்கே சென்றார்.

கோட்டையாக இருந்த நகரம் தரைமட்டமானது. இந்தப் பரலோக நகரம் பூமியின் மீது தன் ஆட்சியைச் செலுத்தும் அந்த வகையில் அது 'பரலோகத்தை விட்டு இறங்கி வரும்.' நீதிமான்களுடைய நல்ல குணத்தால் நகரமே சந்தோஷப்படுகிறது. எந்தக் கவலையும் இல்லாமல் பெருமையடித்து வந்த நகரம் அது." இது பழைய ஏற்பாட்டில் பழைய ஜெருசலேம், தாவீதின் நகரம் பற்றிச் சொல்லப்படும் வரிகள்.

இந்தத் தாவீதின் நகரத்திற்கும் நாம் சென்றிருந்தோம். பழைய ஜெருசலேமின் ஒரு பிராந்தியமே தாவீதின் நகரமெனச் சொல்லப்படுகின்றது. கி.மு.70ஆம் நூற்றாண்டில் உரோமர்களால் ஜெருசலேம் முற்றாக அழிக்கப்பட்டமையால், தாவீதின் நகரம் எங்கேயிருந்தது என்று பல நூற்றாண்டுகளாக அறிய முடியாத நிலை இருந்தது.

இங்கே வாழ்ந்த யூதர்களுக்கும் ஜெருசலேமுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டிருந்தது. சியோன் மலைக் கோட்டையில் இருந்து கொண்டுதான் தாவீது மன்னன் ஆட்சி செய்திருக்கிறான்.

எபிரேய விவிலியத்தின்படி ஒன்றிணைந்த இஸ்ரவேல் அரசின் இரண்டாவது அரசன் ஆவான். (முதல் அரசன் சவுல் சாலமோன் என்று சொல்லப்படுகின்றது) இவன் சிறந்த பாடகனாகவும், இசை வல்லுநராகவும், போர் வீரனாகவும் திகழ்ந்தான் என்றும் அறிய முடிகின்றது. ஆபிரகாம், மோசே, தாவீது - இந்த மூவரினதும் பெயர்கள் பழைய ஏற்பாட்டு வரலாற்றில் மாபெரும் மூன்று பெயர்களாக உள்ளன. ஆபிரகாம் (யூத இனத்தின்) தோற்றுவிப்பாளராக இருந்தார்.

(பயணிப்போம்)



அழிக்கப்பட்ட ஜெருசலேம் நகரின் மாதிரித் தோற்றம்.



# கேது பகவான் அருளும்

# வெளிநாட்டு யோகம் எந்த ராசியினருக்கு கிட்டும்

“வாழ்க்கையை அப்படியே புரட்டிப் போட்டு நல்லதைக் கெட்டதாகவும் கெட்டதை நல்லதாகவும் தலைகீழாக மாற்றுபவர் கேது பகவான். மனதைப் பாதிக்கும் மாற்றங்கள், இருக்கும் இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றுதல் போன்றவற்றை கேதுதான் ஏற்படுத்துவார்” என்கிறார் ‘ஜோதிடக்கலை அரசு’ ஆதித்ய குருஜி. அவர் கேது பகவான் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் அவர்களுடைய ஜாதகத்தில் இருக்கும் அமைப்பைப் பொறுத்து எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துவார் என்பதை மேலும் விளக்கமாகக் கூறுகிறார்.

ஜோதிட சாஸ்திரத்தில் கேது பகவானுக்கு ‘மாற்றங்களைத் தரும் கிரகம்’ என்று பெயர். எந்த ஒரு விஷயத்திலும் மாற்றங்களைக் குறிப்பவர் கேது. ஒருவரின் வாழ்க்கையில் முக்கியமான மாற்றம், சூழ்நிலைக் காரணமாக எடுக்கும் நிலைப்பாடு ஆகியவை, இவரின் தசை, புக்தி. அந்தரங்களிலோ அல்லது கேதுவின் சாரம் போன்ற தொடர்புகளைப் பெற்ற கிரகங்களின் தசை புக்தி அந்தரங்களி லோதான் நடக்கும்.

ஒருவருக்கு வேலை கிடைப்பது, வேலை பறிபோவது, வாழ்க்கையைத் தலைகீழாக்கும் நல்லதும் கெட்டதுமான மாற்றங்கள், போன்ற வற்றைக் கேதுதான் தருவார்.

சர ராசிகளான மேஷம், கடகம், துலாம், மகரம் போன்றவற்றில் அமர்ந்தோ எட்டு, பன்னிரண்டாம் இடங்களுடன் தொடர்பு கொண்டோ இருக்கும் கேது ஒருவரை வெளிநாட்டில் நிரந்தரமாகக் குடியேற வைப்பார்..

தான் அமரும் பாவத்தைக் கெடுத்துப் பலன்களைத் தரும் ராகு பகவான் போல கேது கெடுப்பது இல்லை. அமரும் வீட்டைப் பலவீனமாக்கும் அளவுக்கு அதிகமான பலம் கேதுவுக்குக் கிடையாது.

திருமணம் மற்றும் புத்திர தோஷங்களைக் கொடுக்கக்கூடிய 2, 5, 7, 8 ஆம் இடங்களில் ராகு இருப்பது போன்று இவர் கெடு பலன்களைச் செய்வது இல்லை.

செவ்வாயின் லக்னங்களான மேஷம், விருச்சிகம் ஆகிய இரண்டுக்கும் லக்னாதிபதியைப் போலச் செயல்பட்டு நன்மைகளைச் செய்வார். 6, 8 – ஆம் வீட்டுக்கு உரியவர்களுடன் தொடர்பு ஏற்பட்டு, மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போது மட்டுமே மேற்கண்ட ஆறு லக்னங்களுக்கும் கேது சாதகமற்ற பலன்களைத் தருவார்.

கேதுவுக்கு விருச்சிகம், கன்னி, கும்பம் ஆகியவை நன்மைகளைத் தரும் இடங்கள். சில மூலநூல்களில் மேஷம் முதல் கன்னி வரையிலான ஆறு இடங்களில் இருக்கும் ராகு நன்மைகளைச் செய்வார் என்றும் துலாம் முதல் மீனம் வரையிலான ஆறு இடங்களில் இருக்கும் கேது நன்மைகளைச் செய்வார் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய சர ராசிகளில் இருக்கும் ராகு,கேதுக்கள் தங்களின் தசா புக்தி நடக்கும்போது ஒருவருக்கு இருக்கும் நிலைகளில் மாற்றங்களைத் தருவார்கள். அது வேலை, தொழில், வாழ்க்கை, இருப்பிடம் போன்ற அனைத்து நிலைகளிலும் இருக்கும்.

இனி தனித்தனியாக ஒவ்வொரு லக்னத்துக்கும் கேது என்ன பலன்களை அளிப்பார் என்று பார்ப்போம்.

மேஷ லக்னத்துக்கு 1, 4, 7, 10 – வீடுகளில் குருவுடன் கேது சேர்ந்திருக்கும் போது ‘கேள யோகம்’ எனப்படும் கோடீஸ்வர யோகத்தைத் தருவார். ஒன்பதாம் வீடான தனுசு, 11 ஆம் இடமான கும்பத்தில் இருக்கும் நிலையிலும் மேன்மையான பலன்களைச் செய்வார்.

ரிஷப லக்னத்துக்கு 5, 7, 10 ஆகிய இடங்களில் இருக்கும் நிலையில் ஓரளவுக்குச் சாதகமான பலன்களைச் செய்வார். 11 ஆம் இடமான மீனத்தில் இருக்கும்போது வெளிநாடு தொடர்பான நன்மைகள் இருக்கும். ஐந்தாமிடமான கன்னி, கேதுவுக்குப் பிடித்த வீடு என்பதால் இங்கே சூரியன், செவ்வாய், சனியுடன் இணைந்திருக்கும் நிலையில் நன்மைகளைச் செய்வார்.

மிதுன லக்னத்துக்கு நான்காமிடமான கன்னியில் சனியுடனும், 6 ஆம் இடமான விருச்சிகத்தில் தனித்தும், ஒன்பதாம் வீடான கும்பத்தில் குரு அல்லது புதனுடன் இணைந்தும் தசை நடத்தும் நிலையில் நற்பலன்கள் இருக்கும். ஏழாமிடமான தனுசிலும், பத்தாமிடமான மீனத்திலும் இருப்பது நன்மை தரும் அமைப்புதான்.

கடக லக்னத்துக்கு மூன்று மற்றும் ஐந்தில் கேது தனித்தோ குருவுடன் இணைந்தோ அல்லது குரு பார்வையில் இருக்கும் நிலையிலோ, கேதுவால் நன்மைகள் இருக்கும். எட்டாமிடமான கும்பத்தில் சனியின் தொடர்புகள் ஏற்படாதவரை கெடுதல்களைச் செய்யமாட்டார். ஆறாமிடத்தில் கேது தனித்து இருப்பது நன்மைகளைத் தராது.

சிம்ம லக்னத்துக்கு இரண்டு, நான்கு, ஐந்து, ஒன்பது, பதினொன்றாம் இடங்களில் இவர் நன்மைகளைச் செய்வார். இந்த லக்னத்தின் பாபரான ஆறுக்குடைய சனியின் தொடர்பை அவர் பெறுவது நன்மைகளைத் தராது. சனியின் தொடர்பைப் பெற்று கேது தசை,புக்தி நடக்கும்போது சனியின் பலன்களான கடன், நோய் போன்றவற்றைத் தனது தசை, புக்திகளில் கேது தருவார்.

கன்னி லக்னத்துக்கு லக்னம், மூன்று, ஐந்து, ஆறு, ஒன்பது, பத்து, பன்னிரண்டு ஆகிய இடங்களில் இருக்கும் இவர் நன்மைகளைச் செய்வார். 11, 12 ஆ ம் வீட்டில் இருக்கும் கேது அந்த வீட்டு அதிபதிகளான சூரிய, சந்திரர்களின் நிலையைப் பொறுத்து தனது தசை, புக்திகளில் ஜாதகரை வெளிநாடு, வெளிமாநிலம் போன்ற தூரமான இடங்களுக்கு அனுப்பி வைப்பார்.

துலாம் லக்னத்துக்கு ஐந்து, ஒன்பது, பத்து, பன்னிரண்டு ஆகிய பாவங்களில் கேது அமரும் நிலையில் நன்மைகள் இருக்கும். லக்னத்தில் இருந்தால் கெடுதல்கள் இல்லை. நான்காமிட கேதுவால் நன்மைகள் உண்டு. ஏழு, எட்டு, பதினொன்றில் சாதகமான பலன்களைத் தரமாட்டார்.

விருச்சிக லக்னத்துக்கு 1, 11 -ம் வீடுகளில் அமர்ந்து, குருவின் பார்வையைப் பெறும் நிலையில் கேதுவால் நன்மைகள் இருக்கும். மூன்று, நான்காமிடங்களிலும் நன்மைகளைச் செய்வார். ஐந்து, ஒன்பதாமிடங்களில் குரு, சந்திர, செவ்வாயின் தொடர்புகளுடனும், பத்தாமிடத்தில் சூரியனுடன் தொடர்புகொள்ளும்போதும் கேது சுபராகச் செயல்படுவார். மற்ற இடங்களில் இருக்கும்போது சாதாரண பலன்களை அளிப்பார்.

தனுசு லக்னத்துக்குப் பன்னிரண்டாமிடத்தில் சுப, சூட்சும வலுவுடன் இருந்தால் தனம், ஞானம் இரண்டையும் ஜாதகருக்கு தந்து முக்தியும் அளிப்பார். எட்டில் உச்சம் பெறும் குருவுடன் இணைவதும் நல்ல அமைப்புதான். மூன்றாமிடத்தில் அமர்ந்திருக்கும் கேதுவை, குரு பார்ப்பது யோக நிலை. லக்னம், நான்கு, பத்தில் நன்மைகளைத் தருவார். இவை தவிர்த்த பிற இடங்களில் சாதாரணப் பலன்களைக் கேது தருவார்.

மகர லக்னத்துக்கு, அதன் அதிபதி சனியுடன் இணையும்போது ஆன்மிக ரீதியிலான சுப பலன்களைச் செய்வார். லக்னத்தில் இருக்கும் கேது குரு, சனியோடு தொடர்புகொண்டால் ஜாதகர் ஆன்மிகத் தொடர்புள்ள வராகவும், பக்தி உணர்வு மிக்கவராகவும் இருப்பார். 2, 3, 5, 9, 10, 11 – ஆகிய இடங்கள் ஒன்றில் இருக்கும் கேது நல்ல பலன்களைச் செய்வார். 4, 6, 7, 8 – ம் வீட்டில் உள்ள போது பெரிய நன்மைகளைச் செய்வது இல்லை. ஏழு மற்றும் எட்டாமிடங்களில் இருக்கும் கேது வெளிநாட்டுத் தொடர்புகளைச் செய்வார். பன்னிரண்டில் அமரும் கேது வெளிநாடு, ஆன்மிகம், ஞானம், தனம் ஆகிய பலன்களோடு முக்தி நிலையையும் அருளுவார்.

கும்ப லக்னத்துக்கு லக்னத்தில் இருக்கும் கேது ஆன்மிக உணர்வுகளையும், நல்ல குணங்களையும் தருவார். 2, 3, 4 – ஆகிய வீடுகளில் ஏதாவது ஒன்றில் இருப்பதும் யோகமே. ஐந்தில் இருக்கும்போது ஆண் வாரிசு தோஷம் உண்டாகலாம். ஆறாமிடத்தில் இருக்கும்போது வெளிநாடு, வெளி மாவட்டங்களில் வேலை செய்ய வைப்பார். ஏழாமிடத்தில் இருக்கும்போது மண வாழ்க்கை தாமதமாகலாம். எட்டாமிடத்திலிருக்கும்போது, ஜாதகரை பிறந்த இடத்தை விட்டு, தொலைதூர இடங்களுக்கு அனுப்புவார். 9, 10, 11, 12 -போன்ற வீடுகள் ஒன்றில் இருக்கும்போது நன்மைகளே ஏற்படுத்துவார்.

மீன லக்னத்துக்கு லக்னத்தில் இருக்கும் கேது சனியின் தொடர்பு கிடைத்தால், ஆன்மிக எண்ணங்களைத் தருவார். 3, 4, 6, 7, 8 ஆகிய இடங்களில் நல்ல பலன்கள் இருக்காது. மேற்கண்ட இடங்களில் குருவின் இணைவு அல்லது பார்வை இருக்கும் பட்சத்தில் கெடுதல்கள் செய்ய மாட்டார். 2, 5, 9, 10, 11, 12 – ம் இடங்களில் இருந்தால் நன்மைகள் கிடைக்கும்.

# இந்த வார இராசி பலன்

## மார்ச் 03 முதல் மார்ச் 10 வரை



### மேஷம்:

தொட்டது துலங்கும் நேரம். ராசிநாதன் ஆட்சி பலத்துடன் இருப்பதால் காரிய வெற்றி, மனஅமைதி உண்டு. பதவி உயர்வை எதிர்பார்த்தவர்களுக்கு இனிக்கும் செய்தி உண்டு. ராகு 3 இல் இருப்பதால் செல்வாக்கு உயரும். விலகி நின்ற சொந்தங்கள் நெருங்கி வந்து உறவாடுவார்கள். மாணவர்கள் மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்லும் யோகம் உள்ளது. சூரியனின் பார்வை காரணமாக சுப விசேஷத்திற்கான திகதியை முடிவு செய்வீர்கள். மனைவியின் உடல்நலம் காரணமாக மருத்துவ செலவுகள் வந்து நீங்கும்.



### ரிஷபம்:

ராசிநாதன் சுக்கிரன் கேதுவுடன் இருப்பதால் எதையாவது நினைத்து மனதைக் குழப்பிக் கொள்வீர்கள். குடும்பத்தில் பழைய விடயங்களை பேசி பெரிதுபடுத்த வேண்டாம். சூரியன், புதன் இருவரின் பார்வை காரணமாக இடம் மாற்றம் ஏற்படும். வீடு மாற இடம் பார்த்தவர்களுக்கு நல்ல வீடு அமையும். வெளியூரில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் சொந்த ஊருக்கு மாற்றல் பெற்று வருவார்கள். சொந்த பந்தங்களின் வருகையால் வீட்டில் வேலைச்சுமை, செலவுகள் கூடும். புறநகர் பகுதியில், அல்லது சொந்த ஊரில் நிலம் வாங்கும் யோகம் உள்ளது.



### மிதுனம்:

ராசியில் ராகுவும், 7 இல் சனி, கேது, சுக்கிரனும் இருப்பதால் பதற்றம், மறதி, வீண் செலவுகள் இருக்கும். பிள்ளைகள், பேரன், பேத்திகள் மூலம் செலவுகள் ஏற்படும். சூரியன், புதன் இருவரும் சாதகமாக இருப்பதால் எதையும் சமாளிப்பீர்கள். மாமன் வகை உறவுகளால் மகிழ்ச்சி அனுகூலம் உண்டு. குருவின் பார்வையால் சுபச்செய்தி வரும். வழக்கு சம்பந்தமாக சமாதான தீர்வுக்கு வாய்ப்புள்ளது. கணவரின் உடல்நலம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. நண்பர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். முடிந்தவரை இரவு நேர பயணத்தைத் தவிர்க்கவும்.



### கடகம்

தன, குடும்ப வாக்கு ஸ்தானத்தை சூரியன், புதன் இருவரும் பார்ப்பதால் செல்வாக்குக் கூடும். பணப் புழக்கம் அதிகரிக்கும்.சகோதரியின் திருமண விஷயமாக முக்கிய முடிவுகள் உண்டாகும். குருவின் பார்வையால் தடைபட்டு நின்ற கட்டிட வேலைகளை மீண்டும் தொடங்குவீர்கள். 6 இல் சனி, கேது இருப்பதால் பதவி உயர்வுக்கு யோகம் உண்டு. அரசு ஊழியர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். அரசியலில் இருப்பவர்களுக்கு எதிர்பாராத பதவி, பொறுப்பு கிடைக்கும்.



### சிம்மம்

சூரியன் ராசியைப் பார்ப்பதால் மனநலம் சீராக இருக்கும். தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். சங்கம், பொது அமைப்புகளில் இருப்பவர்களுக்கு கௌரவ பதவிகள் கிடைக்கும். புதனின் பார்வையால் வராத பணம் வசூலாகும். பிள்ளைகள் திருமண விஷயமாக பேச்சுகள் சுபமாக முடியும். வாய்மூலம் பேசி தொழில் செய்பவர்கள் ஆதாயமடைவார்கள். சனி கேது சேர்க்கை காரணமாக எதிர்கால சிந்தனைகள் தோன்றும். விசா சம்பந்தமாக இருந்த பிரச்சினைகள் தீரும்.



### கன்னி

சூரியன், புதன் 6 இல் இருப்பதால் நிறை, குறைகள் இருக்கும். எதிர்பார்த்த இடத்தில் இருந்து பணம் கைக்கு வரும். குருவின் பார்வையால் வீட்டில் சுபவிசேஷத்திற்கான திகதியை முடிவு செய்வீர்கள். பெண்களுக்கு பிறந்த வீட்டில் இருந்து பாகப் பிரிவினை சொத்து, பணம் கிடைக்கும். வீடு மாற இடம் பார்த்தவர்களுக்கு நல்ல வீடு அமையும். சுய தொழில் செய்பவர்களுக்கு அலைச்சல், பயணங்கள் அதிகரிக்கும். அலுவலகத்தில் விருப்பம் இல்லாத இடமாற்றத்திற்கு வாய்ப்புள்ளது. வயிறு சம்பந்தமான உபாதைகளை கவனிப்பது நலம் தரும்.



### துலாம்

சனி 3 இல் தொடர்வதால் முயற்சிகள் வெற்றியடையும். பதவி உயர்வை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல செய்தி வரும். சுக்கிரன் சுபயோகத்தைத் தருவார். சுப விஷயம் காரணமாக பயணங்கள் இருக்கும். ஆன்மிக சிந்தனைகள் அதிகரிக்கும். 7 இல் செவ்வாய் ஆட்சி பலம் பெறுவதால் அரசாங்க விஷயங்கள் அனுகூலமாய் முடியும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். மாமன் வகை உறவுகளால் மகிழ்ச்சி, ஆதாயம் உண்டு. தந்தை உடல்நலம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.



### விருச்சிகம்

ராசி நாதன் செவ்வாய் சொந்த வீட்டில் இருப்பதால் உத்வேகமாகசெயல் படுவீர்கள். வீடு, நிலம், சொத்து சம்பந்தமாக இருந்து வந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். சுக்கிரன், கேது, சனி மூவரின் சேர்க்கை காரணமாக நிதானம், கவனம் தேவை. கண் சம்பந்தமாக சிகிச்சை பெற வேண்டியிருக்கும். கணவன், மனைவிக்கிடையே சிறு வாக்குவாதங்கள் வந்து நீங்கும். வீட்டில் பராமரிப்பு செலவுகள் ஏற்படும். தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு நெருக்கடிகள் வரலாம்.



### தனுசு

ராசியில் சுக்கிரன், சனி, கேது மூவரும் கூட்டாக அமைந்து இருப்பதால் பலவிதமான சிந்தனைகள் தோன்றும். நண்பர்களிடம் இருந்து விலகி இருப்பது நலம் தரும். பயணத்தின்போது கவனம் தேவை. மாமனாரின் உடல்நலம் பாதிக்கப்படலாம். செவ்வாய் சாதகமாக இருப்பதால் கையில் பணப்புழக்கம் இருக்கும். அதிக வட்டிக்கு வாங்கிய கடனை அடைப்பீர்கள். அலுவலகத்தில் வேலைச்சுமை, இடமாற்றம் இருந்தாலும் ஆதாயம் கிடைக்கும். அரசியலில் இருப்பவர்களுக்கு திடீர் பதவி யோகம் உண்டு.



### மகரம்

தன, குடும்ப, வாக்குஸ்தானத்தில் சூரியன், புதன் இருவரும் இருப்பதால் பேச்சில் நிதானம், கவனம் தேவை. அக்கம் பக்கம் இருப்பவர்களிடம் அனுசரணையாகப் போகவும். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருப்பவர்கள் குணமடைந்து வீடு திரும்புவார்கள். கைமாத்தாக கொடுத்த பணம் கைக்கு வரும். சுக்கிரன், குரு இருவரின் பார்வை காரணமாக சுபச் செலவுகள் உண்டு. இல்லறம் இனிக்கும். நீங்கள் எதிர்பார்த்தபடி நல்ல இடத்தில் சொத்து வாங்க முற்பணம் தருவீர்கள்.



### கும்பம்

சூரியன், புதன் இருவரும் உங்களுக்கு யோகத்தைத் தருவார்கள். வெளிநாடு செல்ல விசா கைக்கு வந்து சேரும். உயர்பதவியில் இருக்கும் நண்பரின் உதவி கிடைக்கும். ராகு 5 இல் இருப்பதால் அடிக்கடி உணர்ச்சி வசப்படுவீர்கள்.கைபேசி, மடிக்கணனி போன்ற சாதனங்கள் வாங்குவீர்கள். சொந்த ஊரில் நிலம் வாங்கிப் போடும் யோகம் உள்ளது. உத்தியோகத்தில் இருந்து வந்த அதிருப்திகள் நீங்கும். தொழில் லாபகரமாக நடக்கும். எதிர்பார்த்த ஓர்டர், ஒப்பந்தங்கள் கிடைக்கும். பணப் பிரச்சினைகள் நல்லபடியாக முடியும்.



### மீனம்

செவ்வாய் 2 இல் பலமாக இருப்பதால் செல்வாக்கு கூடும். சொந்த, பந்தங்களிடையே இருந்த மனக்கசப்புகள் மறையும். மனைவிக்கு தங்க நகைகளை வாங்கி பரிசளிப்பீர்கள். கிரகப்பிரவேசம் செய்வதற்கான முகூர்த்த நாளை முடிவு செய்வீர்கள். மாமியார், உடல்நலம் பாதிக்கப்படலாம். உத்தியோகத்தில் தற்காலிக இடமாற்றத்திற்கு வாய்ப்புள்ளது. சுக்கிரன், சனி, கேது மூவரின் பார்வை காரணமாக பயணத் திட்டங்களில் திடீர் மாற்றம் வரும். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். விசா சம்பந்தமாக காலதாமதம் ஏற்படும்.

# இன்னும் குண்டுகள் வீழும் மிக் வியாபாரம்

**சண்டே ஒவ்சேவரின்**
More Bombs Drop in the 'Mig Deal' **கட்டுரையின் தமிழாக்கம்**



இலங்கை விமானப் படையினரிடம் உள்ள மிக் 27 விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து விமானப் படையினரும் அதன் தளபதியான டொனால்ட் பெரேரா வும் ஆர்வமாக இருந்தனர் என கோட்டாபய தெரிவிப்பது மறுக்கப்பட முடியாத விடயம். 2005 மே மாதத்தில் கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலா ளராக பதவியேற்பதற்கு ஆறு மாதங்களிற்கு முன்னரே மேலதிக மிக் 27 விமானங்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று கோரும் கடிதமொன்றை டொனால்ட் பெரேரா பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

ஆனால், விமானங்களை வழங்குவதற்காக சில நாடுகள் முன்வைத்த யோசனைகள் (கேள்வி பத்திர முறையில்லாமல்) குறித்து விமானப்படை தளபதி தயக்கம் கொண்டிருந்தார். குறிப்பாக உக்ரின்மாஸ் நிறுவனம் மார்ச்சிலிருந்து விடுத்த வேண்டுகோள் குறித்து அவர் தயக்கம் கொண்டிருந்தார். கடந்த வருடம் கேள்விப்பத்திர சபை இந்த வேண்டுகோளை நிராகரித்திருந்தது.

“இதுபோன்ற யோசனைகளை ஏற்றுக்கொள்வதைவிட திறந்த கேள்விப்பத்திரமொன்றை வெளியிடவேண்டும். இதுவே விமானப் படைக்கான பொருத்தமான விமானத்தை கொள்வனவு செய்வதற்கு பொருத்தமாகயிருக்கும் என நான் கருதுகிறேன்” என விமானப் படைத் தளபதி தெரிவித்திருந்தார். ஜனவரி 2006 இல் விமானப் படைத் தளபதி புதிய பாதுகாப்புச் செயலாளராக பதவியேற்கவிருந்த கோட்டாபய ராஜபக்ஷவிடம் இந்த வேண்டுகோளை முன்வைத்திருந்தார்.

“விமானப் படைக்குத் தேவையான மேலதிக நான்கு மிக் விமானங்களை சாதாரண கேள்விப் பத்திர நடைமுறையில் கொள்வனவு செய்வதற்கு அனுமதி தாருங்கள்” என்று விமானப் படைத் தளபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் எழுத்து மூலம் கேட்டிருந்தார். எனினும், வழ மையான கேள்விப்பத்திர நடை முறைகளுக்கு பதில் விமானப் படைத் தளபதி 2006 பெப்ரவரி 6ஆம் திகதி ராஜபக்ஷ, அவரது உறவினரான உதயங்க வீர துங்க மற்றும் உக்ரைனின் உக்ரின்மாஸ் நிறுவன அதி காரிகள் ஆகியோருடனான சந்திப்பிற்காக பாதுகாப்புச் செயலாளரின் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டார். அந்தச் சந்திப்பின் பின்னர் டொனால்ட் பெரேரா வழமையான கேள்விப்பத்திர நடைமுறைகளிற்கான தனது போராட்டத்தை கைவிட்டார்.

அவரின் வழமையான கேள்விப் பத்திர நடைமுறையைப் பின்பற்றியிருந்தால் 2000ஆம் ஆண்டு விமானங்கள் கொள்வனவு செய்ததைப் போன்று பல விநியோகஸ்தர்களின் கோரிக்கைகளை பரிசீலித்துப் பார்த்திருக்கக் கூடியதாக இருந்திருக்கும். மாறாகத் தானாக முன்வந்த நிறுவனமொன்று (உக்ரின்மாஸ்) முன்வைத்த வேண்டுகோளை அவர் ஏற்றுக்கொண்ட அதேவேளை, தாங்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையிலேயே விநியோகம் இடம்பெறும் என்பதைக் காண்பிப்பதற்காக முறைப்படி வேண்டுகோளை முன்வைக்குமாறு உக்ரின்மாஸ் நிறுவனத்திடம் கேட்கும் நிலை ஏற்பட்டது.

**வேறு எந்த கேள்விக் கோரல்களும் இல்லை**

இது நான்கு மிக் 27 விமானங்களை தலா 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களிற்கு வாங்குவதற்கும், தற்போது பாவனையிலுள்ள நான்கு விமானங்களை தலா 8,60,000 முதல் 1.14 மில்லியன் டொலர்களிற்கும் பழுதுபார்ப்பதற்கான யோசனையாகும். பாதுகாப்பு அமைச்சின் ஊடாக விமானப் படையினர் குறிப்பிட்ட யோசனையை முறைப்படி பெற்றுக்கொண்ட பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மிக் 27 விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான இந்தத் தனியொரு யோசனையை மதிப்பீடு செய்வதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமிக்குமாறு கேட்டுக்கொண்டார். வழமையான நடைமுறைகளைப் பின்பற்றி ஏனையவர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்களை கோராமல் அவர் இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

வழமையான கேள்விப்பத்திர நடைமுறைகளுக்கு பதில் விமானப் படைத் தளபதி 2006 பெப்ரவரி 6ஆம் திகதி ராஜபக்ஷ, அவரது உறவினரான உதயங்க வீரதுங்க மற்றும் உக்ரைனின் உக்ரின்மாஸ் நிறுவன அதிகாரிகள் ஆகியோருடனான சந்திப்பிற்காக பாதுகாப்புச் செயலாளரின் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டார். அந்தச் சந்திப்பின் பின்னர் டொனால்ட் பெரேரா வழமையான கேள்விப்பத்திர நடைமுறைகளிற்கான தனது போராட்டத்தை கைவிட்டார்.

ராஜபக்ஷவின் வேண்டுகோளின் கீழ் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் பழுதுபார்ப்பதற்காகவும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட்ட போதிலும், விமானங்களைப் பழுதுபார்க்கும் நடவடிக்கையை இந்தக் குழு மதிப்பீடு செய்வதில் பிரச்சினை காணப்பட்டது. பெப்ரவரி 21 2006 இல் இக்குழு நியமிக்கப்பட்டவேளை மிக் விமானங்களை பழுது பார்ப்பதற்கான வேறு கேள்விப் பத்திரங்களை விமானப்படை ஏற்கனவே கோரியிருந்தது. இந்த கேள்விப்பத்திர நடைமுறைகளை கண்காணிக்கும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபையில் ராஜபக்ஷ இடம்பெற்றிருந்ததால் அவருக்கு இது நன்கு தெரிந்திருந்தது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபை 2006 ஜனவரி 20ஆம் திகதி சந்தித்திருந்தது. அந்தக் கூட்டத்தின் குறிப்புகள் இவ்வாறு தெரிவிக்கின்றன – அதுவரை கோரப்பட்ட கேள்விப்பத்திரத்திரங்களை இரத்துசெய்துவிட்டு இரண்டு அரசாங்கங்களுக்கு இடையிலான பரிமாற்றமாக இந்தியாவின் பழுதுபார்க்கும் M/S HAL நிறுவனத்திடமிருந்து புதிய யோசனைகளை கோருமாறு அமைச்சரவைக்கு பரிந்துரை செய்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரையை கோட்டாபய ராஜபக்ஷ புறக்கணித்தார். மார்ச் 21ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் கையெழுத்திற்காக பாதுகாப்பு அமைச்சு தயாரித்த அமைச்சரவை பத்திரம் வேறு முடிவுகளைக் கொண்டிருந்தது.

(தொடரும்)

# அந்த... ஒரு நிமிடம்

அந்த ஒரு நிமிடம் என்ற இத்தொடரில் ஒரு சம்பவம் நடைபெற்ற அந்த நிமிடத்தில் அதில் சம்பந்தப்பட்டவர் அல்லது சம்பந்தப் பட்டவர்கள் இருந்த மனோநிலை பற்றிக் கூறப்படுகிறது. சம்பவம் உண்மையோ அல்லது புனைவோ என்பது இங்கே முக்கியமல்ல. அது கற்றுத் தரும் பாடமும் வாசகர்கள் அதிலிருந்து பெறும் படிப்பினையும்தான் மிகவும் முக்கிய மானது. இதிலே அவ்வப்போது துக்கமும் சந்தோ சமும் கலந்து வரும். ஜீரணியுங்கள்.

எஸ்.கணபதி

இரண்டு தினங்களுக்கு முன்னர்தான் நிர்மலாவுக்குத் திருமணம் நடந்தது. திருமணத்திற்குப் பிறகு இன்றுதான் அவள் கணவன் அசோக் வேலைக்குப் போயிருக்கிறான். காலையில் அவன் புறப்பட்ட நேரந்தொட்டு, எதையோ தொலைத்துவிட்டவளைப் போல அங்கலாய்த்தபடி... அங்குமிங்கும் அலைந்து திரிந்தபடி... மாலைக் காகக் காத்திருந்தாள் நிர்மலா. வாசல் கேற் திறக்கும் சத்தம் கேட்ட போதெல்லாம் அசோக் வந்து விட்டானா எனப் பார்த்துப் பார்த்து ஏமாந்து போய்விட்டாள் நிர்மலா.

ஓட்டோ சத்தத்தைத் தொடர்ந்து அசோக் வீட்டினுள் நுழைந்தான். அவனைக் கண்டதும் நிர்மலாவின் முகம் மலர்ந்தது.

“என்...ன ! ” நிர்மலா சிணுங்கினாள்.

“ஒரு கிழமை லீவுக்குப் பின்னாலை போனேனெல்லா! தலை நிமிர விடாம வேலை வாங்கிட்டாங்க” என்று பதில் கொடுத்தவாறு நிர்மலாவின் தலையைக் கோதிவிட்டான் அசோக்.

“அன்ரி இப்பவும் போன் பணிணினவ. ஆறு மணிக்க வந்திடணுமாம். பல பேர் வருவாங்க போலிருக்கு. சாப்பாடு தடல்புடலா இருக்கும் அசோக். ஒரே சீ பூட் டாகத்தான் இருக்கும். வந்து பாருங்களேன்” என்றவாறு சுழன்று சுழன்று தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள் நிர்மலா.

**நேரம்**

**மாலை 07 மணி 30 நிமிடம் 22 செக்கன்கள்.**

நிர்மலாவின் மனம் அவளிடமில்லாது அண்டவெளியில் சுற்றித் திரிந்தது. மீண்டும் மீண்டும் முதல் நாள் இரவில் நடந்த சம்பவங்கள் கோர்வையாய் நீள நீள அவள் வெட்கித்துப் போனாள். இன்றும் தொடரும்...? அசோக்கின் முரட்டுப் பிடிக்குள் அவள் சிக்குண்டு தவித்தபோது... அது ஆனந்தத்தின் உச்சமாய்... ஆய கலைகளில் அதுவும் ஒன்றோ?

அவளுக்குச் சில தினங்களுக்கு வீட்டிலேயே இருந்துவிட வேண்டும் போலத்தானிருந்தது. ஆனால் உறவுகளின் அன்புத் தொல்லைதான் இப்படிப் புறப்பட வைத்திருக்கிறது. திருமணம் முடித்த புது மணத் தம்பதியை உறவு சம்பிரதாயமென உணவுக்கு அழைப்பது? “இளசுகளின் உள்ளுணர்வைப் புரியாத உறவுகள் இவர்கள். ஞான சூனியங்கள்” நிர்மலா மனதுக்குள் திட்டிக் கொண்டாள்.

அசோக் காரியாலயத்தால் வந்ததும் என்னென்ன செய்ய வேண்டும் என்று ஒரு பெரிய பட்டியலே இட்டு வைத்திருந்தாள் நிர்மலா. அவனுக்குப் பிடித்தவை எவை என இன்னும் அவனிடம் கேட்டுத் தீரவில்லை. குறுகிய கால இடைவெளியில் தீர்மானிக்கப்பட்ட திருமணம். கதைத்துப் பேச அதிகம் வாய்ப்பிருக்கவில்லை. எல்லாமே திருமணத்திற்குப் பின்பு என்றாகிவிட்ட நிலைமை. இருந்தும் இருவரும் கல்விப் பின் புலத்தில் இருந்து வந்ததால் நெருங்க அதிக காலம் பிடிக்கவில்லை. குறுகிய இடைவெளிக்குள் தமக்குள் ஒரு அந்நியோன்னியத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

**நேரம்**

**மாலை 07 மணி 31 நிமிடம் 42 செக்கன்கள்.**

‘நிர்மலா சாப்பிடுங்கோவன்...” அங்கு வந்திருந்த உறவுகளின் பேச்சுச் சத்தத்திற்கு நடுவே அவளையும் அசோக்கையும் சாப்பிட அழைத்தாள் அன்ரி. நிர்மலா எழுந்தபோது அசோக் அவளின் கரத்தைப் பற்றினான். “கொஞ்சம் இருந்துவிட்டுப் போகலாம்” என்று சொல்வது போல் இருந்தது அந்தப் பிணைப்பு.

“பார்ட்டிகளில் கலந்து கொள்வது அசோக்கிற்கு ரொம்பப் பிடிக்கும்”.... நிர்மலா.

வழமையாக இது போன்ற விருந்துகளில் கலந்து கொண்டால் கடைசி ஆளாகப் போகிறவள் நிர்மலாவாகத்தானிருப்பாள். ஆனால் இன்று அத்தனை அவசரப்பட்டாள். ஏனெனில் கடந்த இரவு விட்டதைத் தொடர வேண்டும். உணவுக்குப் பின்னால் அசோக் அந்தக் கரமெல் புடிங்கைச் சுவைத்துக் கொண்டிருந்தான். நிர்மலாவின் கை விரல்கள் இன்னமும் அந்த இடியப்ப புரியாணியை கசக்கிக் கொண்டிருந்தன. அவள் உள்ளத்தால் அங்கிருக்கவில்லை.

அந்தப் பார்ட்டி சூழ்நிலையிலிருந்து எழுந்த மனித இரைச்சலையும் தாண்டி மழை இரைச்சல் கேட்டது. கூரையில் இருந்து சொட்டுவிடும் ஒவ்வொரு மழைத்துளியும் கலங்கரை விளக்காய்த் துலங்கிக் கொண்டிருந்தது. “ச்சீ... இப்ப பார்த்து இந்த மழை” நிர்மலா மனதுக்குள் இயற்கையைத் திட்டிக் கொண்டாள்.

நிர்மலாவின் வீடு அன்ரியின் வீட்டிலிருந்து அத்தனை தூரமில்லை. இருந்தும் சேலையோடு மழையில் நனைந்த படி நடப்பதென்பது... மனதுக்குள் ஒரு நெருடலாக!

“நிர்மலா போகேக்கை சொல்லுங்கோ, குடை தரலாம்” அன்ரி சொன்னாள். “இல்லை அன்ரி மழை விட்டிடும். பக்கத்திலதானே” நிர்மலா பதில் சொன்னாள். குடை என்றதும் கோல்பேஸ் கடற்கரை அவள் ஞாபகத்துக்கு வந்தது. ஒவ்வொரு தடவையும் அந்தக் காட்சிகளைப் பார்க்கும்போதும் அவற்றைப் பற்றிக் கவிதை எழுத வேண்டும் போல் தோன்றும். “காதலும் குடையும்” அல்லது “ குடையும் நெருக்கமும்” அதற்கான தலைப்புகள் இப்படியும் இருந்திருக்கலாம்!

அசோக்கிற்கு இலக்கிய ஆர்வம் இல்லாவிட்டாலும் பாட்டு, கவிதை என்பனவற்றை ரசிக்கக்கூடிய சுபாவம் இயல்பாக இருந்தது. நிர்மலா ஒரு கவிதைப் பிரியை என்று அறிந்ததும் அவன் முதல் சந்திப்பன்றே அவளுக்கு ஒரு கவிதைப் புத்தகத்தையும் பரிசளித்து அவளை திக்குமுக்காட வைத்துவிட்டான் என்றால் பாருங்களேன். இத்தனை சிந்தனைகளுக்குமிடையே தலையை நீட்டி “மழை பெய்கிறதா?” என்று பார்த்துக் கொண்டாள் நிர்மலா.

**நேரம்**

**மாலை 07 மணி 32 நிமிடம் 33 செக்கன்கள்.**

மழைத் தூறல்கள் விழுந்து கொண்டிருந்தன.

“தாங்ஸ் அன்ரி. போட்டு வாறம்” குடையை விரித்தபடி நடக்கத் தொடங்கினாள் நிர்மலா. அவளைத் தொடர்ந்தான் அசோக். அன்ரி வீட்டுக்குச் சற்று அப்பால் வந்ததும் நிர்மலா அசோக்கின் இடையை இறுகப் பற்றிக் கொண்டாள்.“அசோக் கிட்ட வாரும். மழையிலை நனையாதையும்” அவனுடனான நெருக்கத்தை இன்னும் அதிகரிக்கத்துக் கொண்டாள் நிர்மலா. அவளின் தலை முடிக்குள் முகம் புதைத்தபடி நடந்து கொண்டிருந்தான் அசோக்.

மழை சற்றுக் குறைந்ததும் இடி இடித்தது. மின்னல் மின்னியது. மின்னல் வெளிச்சத்தில் அவள் முகம் தெளிவாகத் தெரிந்தது. அவள் தனிநிலை இல்லாமல் நடந்து கொண்டிருந்ததை அசோக் கண்டுகொண்டான். அவளை இன்னும் தன்வசம் இறுக அணைத்தபடி நடந்து கொண்டிருந்தான் அசோக்.



**நேரம்**

**மாலை 07 மணி 43 நிமிடம் 38 செக்கன்கள்.**

ஒழுங்கையில் இருந்து பெருந்தெருவை ஒட்டி நடக்கத் தொடங்கினர். இன்னும் சில நிமிடங்களில் வீடு வந்துவிடும். ஆனால் வேகமாக நடக்க நடை பாவாதிருந்தது. இருவருமே மிகவும் குறைந்த வேகத்துடன் நடந்து கொண்டிருந்தனர். எதிரே வந்த வாகனங்களின் வெளிச்சத்தால் கண்கள் கூசியது. கைளை உயர்த்தி கண்களை மறைத்துக் கொண்டாள் நிர்மலா.

ச...ர்... எனச் சத்தமிட்டபடி பின் புறத்தலிருந்து வந்த லொறி ஒன்று இவர்கள் இருவர் மீதும் சேற்றை வாரி இறைத்தபடி இருவரையும் உரசுவதுபோலச் சென்றது. அசோக் திடீரென தெருக்கரையோரத்துக்குப் பாய்ந்தபோது நிர்மலா அங்கிருந்த கழிவு நீர்க் கால்வாய்க்குள் விழுந்து நிசப்தமுற்றுக் கிடந்தாள். அவளைத் தாங்கிக் கொண்டபடி தடுமாறிக் கொண்டிருந்தான் அசோக்.

**நேரம்**

**மாலை 07 மணி 44 நிமிடம் 18 செக்கன்கள்.**

மழை இன்னும் தூறிக்கொண்டி ருந்தது.

- து.கௌரீஸ்வரன்

# இலங்கைத் தமிழர்களும் தாய் மொழித் தினமும்

## - சில அவதானங்கள்


பின் காலனித்துவ, உலகமயமாக்கற் சூழலில் அடையாள அரசியல் மிகவும் பிரதானமானதாக மேலெழுந்து வந்துள்ளது. இந்த அடையாள அரசியலில் முறைமைகளும், தற்காப்பு முறைமைகளும் செல்வாக்குச் செலுத்துகின்றமையைக் காண்கின்றோம். பல்வகைமைகளின் வித்தியாசங்களை மதித்து வேற்றுமையில் ஒற்றுமை அல்லது ஒருமைப்பாடு காணும் அடையாள அரசியல் ஒரு வகை. இது ஆக்கபூர்வமான, காத்திரமான அடையாள அரசியல் செயற்பாடாக கவனிப்பிற்கு உள்ளாகின்றது.

பல்வகைமைகளை மறுதலித்து பெரும்பான்மை மேலாதிக்கப் பிரிவினருடைய அடையாளங்களை பொதுமைப்படுத்தும் அடையாள அரசியல் இன்னொரு வகை இதில் தூய்மை வாதம், அடிப்படை வாதம், பெரும்பான்மை வாதம் என்பன மேலோங்கிக் காணப்படுகின்றன. இது வன்முறைகளுக்கும் பிரிவினைகளுக்கும் வாய்ப்பளிக்கின்றது.

பெரும்பாலும் அடையாள அரசியலின் ஆதாரமாக மொழி விளங்கி வருவதைக் காணலாம். ஒரு மனிதக் குழுமத்தின் மொழி வெறுமனே தொடர்பாடலுக்கான ஊடகம் மட்டுமல்ல மாறாக அக்குழுமத்தின் கலைகள், தத்துவம், விளையாட்டு, நம்பிக்கைகள், பொருளியல், அரசியல், சூழலியல், அறிவியல் என ஒட்டு மொத்தமான பண்பாட்டைக் கட்டி வளர்க்கும் ஆதாரமாக விளங்கி வருகின்றது. ஆகவே ஆக்கபூர்வமான அடையாள அரசியற் செயற்பாடுகளில் சுதேச அல்லது தாய் மொழிகளின் இருப்பும் - தொடர்ச்சியும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

வங்காள மொழியை அரச கரும மொழியாக ஆக்கக் கோரிய வங்கதேச மாணவர்களின் எழுச்சியும் அச்சமயத்தில் மரணித்த மாணவர்களின் நினைவும் அது தொடர்பான வங்கதேசத்தின் கோரிக்கைகளும் சர்வதேச தாய்மொழித் தினத்தை பிரகடனப்படுத்த யுனெஸ்கோவிற்கு வாய்ப்பை வழங்கியது. (இலங்கையில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டு வன்முறைச் சம்பவங்கள் வங்கதேசத்தின் அனுபவங்களுடன் ஒப்பு நோக்கப்படுகின்றன. அதாவது வங்கதேசத்தவர் தமது மொழியுரிமைப் போராட்டத்தை மையப்படுத்தி சர்வதேச தினத்தை உருவாக்கினார்கள். இலங்கைத் தீவில் வாழும் தமிழர்கள் தமது மொழிக்காக ஏற்பாடு செய்த ஓர் ஆராய்ச்சி மகாநாட்டில் இடம்பெற்ற வன்முறைகளை சர்வதேச ரீதியில் கொண்டுசென்ற தன்மை தொடர்பாக இத்தினத்தை மையப்படுத்தி உரையாடப்படுகின்றது, விவாதிக்கப்படுகின்றது.)

இந்த வகையில் இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இன்றைய உலகமயமாக்கல் சூழலின் சவால்களை எதிர்கொண்டு தமது மொழியை ஆதாரமாகக் கொண்ட தம் பண்பாட்டின் தனித்துவங்களைப் பாதுகாத்து அவற்றை வலுவூட்டி முன்னெடுத்தலுக்கான செயற்பாடுகள் குறித்து ஆர்வம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. உலகந்தழுவி வேற்றுமைகளுள் ஒற்றுமை கண்டு தமிழ்ப் பண்பாடுகளை வளப்படுத்தி - வலுவூட்டி




முன்கொண்டு செல்வதற்கான காத்திரமான உரையாடல்களை சர்வதேச தாய்மொழித் தினத்தை மையப்படுத்தி உரையாடுவது பொருத்தமாகும். இவ்வுரையாடல்கள் தமிழ் சூழலில் கிழக்கிலங்கையில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு காத்திரமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச தாய்மொழித் தினம் யுனெஸ்கோவால் பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டிலிருந்தே இத்தினத்தை பிரக்ஞைபூர்வமாகக் கொண்டாடும் நடவடிக்கைகள் கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் தொடங்கப் பெற்றுள்ளன. இதில் மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக் குழுவினரும், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையும், 2015 இன் பின்னர் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகமும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**சர்வதேச தாய்மொழித் தினம் யுனெஸ்கோவால் பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டிலிருந்தே இத்தினத்தை பிரக்ஞைபூர்வமாகக் கொண்டாடும் நடவடிக்கைகள் கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் தொடங்கப் பெற்றுள்ளன.**

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 21அன்று கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை, பண்பாட்டு பீட மாணவர் அவையின் ஏற்பாட்டில் இத்தினம் கிழக்குப் பல்கலையில் முதன்முதலாகக் கொண்டாடப்பட்டது. சுதேச மொழிகளின் இருப்பும் முன்னெடுப்பும் குறித்து காத்திரமான உரையாடல்கள் இதில் நடைபெற்றன.மூன்றாவது கண் நண்பர்கள் குழுவினரின் செயற்பாடுகள் இதேவேளை (2002 இலிருந்து) மூன்றாவது கண் நண்பர்கள் தாம் செயற்பட்ட இடங்களில் தமிழ் மொழியில் துறைசார் அறிவு அனுபவ ஆற்றல்களைப் பகிரும் ஆளுமைகளை அடையாளங்கண்டு அவர்களது இல்லம் சென்று மல்லிகை மலர் கொடுத்து வாழ்த்துக் கூறும் செயற்பாட்டை குறித்த தினத்தில் மேற்கொண்டார்கள்.

பண்டிதர்கள், பாரம்பரியக் கலைஞர்கள், அண்ணாவிமார், பாரம்பரிய வைத்தியர்கள், சோதிடர்கள், ஆசிரியர்கள் எனத் தமிழில் அறிவு அனுபவங்களை வழங்கி வரும் ஆளுமைகள் பலர் வாழ்த்திக் கௌரவிக்கப்பட்டனர். விசேடமாக சிறுவர் குழுவினர் இச்செயற்பாட்டைச் செய்ய வழிப்படுத்தப்பட்டிருந்தார்கள்.இத்தினத்தில் சிறு சிறு விழாக்களை ஏற்பாடு செய்து நடத்துதல் முக்கியம் பெற்றுள்ளது. இதில் உரையாடல்கள், ஆற்றுகைகள், கௌரவிப்புக்கள் எனப்பல செயற்பாடுகள் நடைபெற்றுள்ளன.

இத்தோடு தாய்மொழிகள் தினம் குறித்த வாழ்த்து மடல்கள், பிரசுரங்கள் தயாரித்து வழங்கும் செயற்பாடுகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. பிரசுரங்களில் 21 ஆம் நூற்றாண்டில் தமிழை வளமூட்டி முன்னெடுத்தலுக்கான உரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது உலகம் முழுவதும் வெவ்வேறு பண்பாடுகளின் அனுபவங்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் தகவல் தொடர்பாடல் இணையவழித் தமிழினூடாக ஒன்றிணைந்து காரியமாற்றுவதற்கான சாத்தியங்கள் தொடர்பாகவும், வெவ்வேறு பண்பாடுகளின் அனுபவங்களை நேரடியாகத் தமிழுக்குத் தரும் நடவடிக்கைகள் மூலமாகத் தமிழ் மொழியை 21ஆம் நூற்றாண்டில் உலகின் அறிவு அனுபவங்களை உட்கொண்ட மொழிகளுள் ஒன்றாக வளமூட்டி முன்னெடுப்பதற்கான பொருத்தப்பாடுகள் குறித்தும் முன்மொழியப்பட்டு உரையாடப்பட்டது.

மேலும், ஆங்கிலம் வழியாக மட்டுமன்றி நேரடியாக உலகின் அனுபவங்களை அந்தந்த மொழிகளின் மூலத்திலிருந்தே தமிழுக்கு கொண்டு வரும் வல்லமை உலகில் பரந்தும் சிதறியும் வாழும் புலம்பெயர் வாழ் தமிழர்களால் சாத்தியப்படக்கூடிய வல்லமைகள் குறித்தும் உரையாடப்பட்டது. தமிழ் மொழியில் உள்ள ஆண் ஆதிக்க, சாதி மேலாதிக்க மொழியாளுகையின் தன்மைகள் தொடர்பான விமர்சனங்களும் அவற்றை நீக்கி அனைத்து மனிதர்களுக்கும் உரிய மொழியாக மீளுருவாக்குவதின் அவசியம் பற்றியும் இதில் உரையாடப்பட்டன.

பாரம்பரியக் கலைகளின் பல்பண்பாடுகள் குறித்தும், பூர்வ குடிகளான ஆதிவாசிகளின் அறிவு திறன் வாழ்க்கை முறைகள், கலைகள் குறித்தும் விழாக்கள் கொண்டாடப்பட்ட அதேவேளை இந்த வருடம் உள்ளூர் உணவின் மொழிகள் தொடர்பிலான தொனிப்பொருளில் சர்வதேச தாய்மொழித் தினம் கொண்டாடப்படுகின்றது. இவ்வாறாக உலக அளவில் அடையாளம் மற்றும் பண்பாட்டு நெருக்கடிகளை எதிர்கொண்டு வாழும் தமிழர்களாகிய நாம் எவ்வாறு தமிழ்ப் பண்பாடுகளின் பன்மைத் தன்மைகளை வித்தியாசங்களாக விளங்கிக் கொண்டு வேற்றுமையில் ஒற்றுமை கண்டு செயற்பாடுகளினூடாக தமிழ்த்தன்மையினை வளமூட்டி முன்கொண்டு செல்லலாம் என்பதற்குறிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் கிழக்கிலங்கையில் நடைபெற்று வருவதனை பதிவு செய்து கொள்ளமுடிகின்றது.




# கழுதையின் தந்திரம்

ஒரு வியாபாரி உப்பு வாங்குவதற்காகத் தன் கழுதையைக் கடற்கரைக்கு ஓட்டிச் சென்றார். போகிற வழியில் ஓர் ஓடை இருந்தது. திரும்பி வரும்போது கால்தவறிக் கழுதை ஓடையில் விழுந்தது. தண்ணீரில் உப்பு கரைந்து போனதால், கழுதை எழுந்தபோது சுமையின் கனம் மிகவும் குறைந்திருந்தது.

வியாபாரி திரும்பிப்போய், இன்னும் கூடுதலாக உப்பைத் தனது கோணிகளில் நிரப்பிக் கொண்டான். வேண்டுமென்றே கழுதை மீண்டும் விழுந்து தனது பாரத்தைக் குறைத்துக் கொண்டது. எனவே அது வெற்றிகரமாகக் கனைத்தது.

வியாபாரிக்குக் கழுதையின் தந்திரம் புரிந்துபோகவே, மூன்றாம் முறையாக கடற்கரைக்கு அதை ஓட்டிச் சென்றான். அங்கே உப்புக்கு பதிலாகக் பஞ்சு மூட்டைகளை வாங்கினான். ஓடையை அடைந்ததும், மீண்டும் அதே தந்திரத்தைக் கழுதை செய்தது.

ஆனால் பஞ்சு தண்ணீரை உறிஞ்சிக் கொண்டு மிகவும் கனத்துப் போனது. ஆனால் கழுதைக்கு எழுந்து நடக்கமுடியாமல் போனது.



# அறிந்து கொள்வோமே!

சூரியக் குடும்பத்தில் அணிகலன் என அழைக்கப்படும் சனிக்கோளின் வளையங்களை 1610 ஆம் ஆண்டு முதன்முதலில் டெலஸ்கோப் மூலம் கண்டுபிடித்தவர் கலிலியோ கலிலி. 1675 ஆம் ஆண்டு இதில் வளையங்களுக்கிடையேயான அடுக்குகளை கண்டறிந்தவர், ஜியோவனி டொமனிகோ.

1979 செப்டெம்பரில் பயனீர் 11, 20,900 கி.மீ அளவில் சனியின் F வளையத்தை ஆய்வு செய்தது. 1980 நவம்பரில் வாயேஜர் 1 (64,200 கி.மீ G வளையம்), 1981 ஒகஸ்டில் வாயேஜர் 2(41,000 கி.மீ) அருகில் சென்று சனியின் வளையங்களின் அதிதுல்லிய படங்களை எடுத்தது.

தற்போது நாம் பார்க்கும் சனிக்கோளின் படங்கள் கேசினி ஆராய்ச்சி விண்கலம் எடுத்தவையே. சனியைச்சுற்றியுள்ள வளையங்களின் நீளம் 2 கி.மீ. அதிகமானவையும் உண்டு. வளையங்களில் உறைந்த பனிக்கட்டி, பாறைத்துகள்கள் உள்ளன. வளையங்கள் 14 துணைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

# கேள்விக்கு என்ன பதில்?




1. மனித உடலின் மிகப்பெரிய சுரப்பி எது?
2. கர்ணனுடன் தொடர்புடைய ஆபரணம் எது?
3. மலேசிய பணத்தின் பெயர் என்ன?
4. சூரியனின் வயது என்ன?
5. உழவனின் நண்பன் என்று அழைக்கப்படுவது எது?

விடைகள்
1. ஈரல்
2. கவச குண்டலம்
3. ரிங்கிட்
4. 500கோடி ஆண்டுகள்
5. மண்புழு





# விடுகதைகள்



1. கடையெழுத்து மாறிடில் தின்னலாம், முதலும் கடையும் சேர்ந்தால் குளிரும், மொத்தத்தில் முருகன் இடம். தெரிந்தவர் சொல்லுங்கள் ?
2. அள்ள முடியும், ஆனால் கிள்ள முடியாது அது என்ன?
3. அழகான பெண்ணுக்கு அதிசயமான வியாதி, பாதிநாள் குறைவாள், பாதிநாள் வளர்வாள் அது என்ன?
4. பாலாற்றின் நடுவே கறுப்பு மீன் தெரியுது அது என்ன?

விடைகள்
1. பழனி
2. நீர்
3. நிலா
4. கண்கள்



# பூக்களைப் பறிக்காதீர்



அழகுமிகு ரோஜா செடி அருகில் இருந்ததாம்
செடிகள் நிறைய பூக்கள் மலர்ந்து இருந்ததாம்
கண்ணைக் கவரும் வண்ணம் பல இருந்ததாம்
காண்போர் மனதில் மகிழ்ச்சி இருந்ததாம்.

இரகசியமாய் சிலர் மலர் பறிக்க நினைத்தனரே
இதைக் கைகள் கொண்டே செய்து பார்த்தனரே
செடியின் முட்கள் கைகளில் குத்தி வலித்ததுவே
சென்ற வேகத்தில் ஓடியே மறைந்தனரே!.

பார்த்து ரசிக்கவே பூக்கள் மலர்கின்றன
பறித்து எறிய பூப்பதில்லை அறிந்திடுவீர்
அழகாய் இருப்பதை ஆசையோடு ரசித்திடுவோம்
அவசியமின்றி பறிப்பதை அறவே விலக்கிடுவோம்

# 12 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்






# அதிசய உடம்பின் தோல்

பொதுவாகவே, நம் எல்லோருக்கும் அடிக்கடி தோல் உரியும். நம் வாழ்நாள் முழுவதும், உடம்பில் இருந்து மொத்தமாக எவ்வளவு தோல் உரியும் என்று தெரியுமா? வாழ்நாள் முழுவதும் நம் உடம்பில இருந்து உரிந்து விழும் தோலின் எடை கிட்டத் தட்ட 18 கிலோ.

எமது உடம்பிலேயே அதிக நீளமான உறுப்பு எது தெரியுமா..?? தோல்தான். நன்கு வளர்ந்த ஆணின் தோலை முழுதாக நீட்டி அளந்தால் 20 சதுர அடிக்கு வருமாம்.









இப்பத்திரிகை இல.10, வில்வம் தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள
நோர்சி மீடியா ( பிறைவேட் ) லிமிடெட் நிறுவனத்தால் 03.03.2019 அன்று வெளியிடப்பெற்றது.